Registered as a Newspaper பக்கங்கள்: 8

விலை: ரூபா 5-00

ஈழநாதம்

THE EELANATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 மார்கழி 10 25 - 12 - 94 ஞாயிற்றுக்கிழமை ஓசை 310

## பொது நிர்வாக அமைச்சில் புதிதாக 2500 பேருக்கு நியமனம்

அரசாங்க துறையில் தகைமை வாய்ந்த 2500 விண்ணப்பதாரர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படவுள்ளது. எழுதுவினைஞர்கள், தட்டெழுத்தாளர்கள், சுருக்கெழுத்தாளர்கள் ஆகிய தரங்களில் அரசாங்க திணைக்களங்களிலும் - கூட்டுத்தாபனங்களிலும் போட்டிப் பரீட்சையொன்றின் மூலம் 2500 பேரை தேர்ந்தெடுப்பதற்கு பொதுநிர்வாக அமைச்சு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. டிசம்பர் மாதம் 30 ஆந்திகதி, ஜனவரி மாதம் ஆறாந் திகதி ஆகிய அரசாங்க வர்த்தமானிகளில் இது தொடர்பான விபரங்கள் வெளியிடப்படவுள்ளன. ஆகக்குறைந்த கல்வித்தகைமை க. பொ த. (சா-த) பரீட்சையில் கணிதம், மொழி உட்பட நான்கு திறமைச்சித்திகளுடன் சித்தியடைந்திருக்க வேண்டும் என அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். எழுதுவினைஞர் தரங்களுக்கு விண்ணப்பங்களை அனுப்புவதற்கான இறுதித் திகதி ஜனவரி 15ஆந் திகதியாகும். தட்டெழுத்தாளர், (8ஆம் பக்கம் பார்க்க)

### எமது இனிய நத்தார் வாழ்த்துக்கள்

ஈழநாதம் வாசகர்கள், விநியோகஸ்தர்கள், விளம்பரதாரர்கள், அபிமானிகள் மற்றும் அனைவருக்கும் எமது இனிய நத்தார் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

## வாகரையில் கண்ணிவெடித் தாக்குதல்

# ராணுவ பஸ்வண்டி சிதறியது

# 5 படையினர் பலி; 20 பேர் காயம்

## அரசபதவிக்கு ஆட்சேர்ப்பு வயதெல்லை அதிகரிப்பு

அரசாங்க பதவிகளுக்கு ஆட்களைச் சேர்க்கும் வயதெல்லையை 40 இலிருந்து 45 ஆக அதிகரிப்பதென பொது நிர்வாக அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதேவேளை இலங்கை நிர்வாக சேவைக்கு அதிகாரிகளைச் சேர்த்துக் கொள்ளும் திறந்தபரீட்சை 30-ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

## தடைநீக்கப்பட்ட பொருள்களும் ராணுவத்தினால் பறிமுதல்

(யாழ்ப்பாணம்)

புதிய அரசாங்கத்தினால் சமீபத்தில் தடைநீக்கம் செய்யப்பட்ட பொருள்கள் வட பகுதிக்கு எடுத்துக்கொண்டு வருவதில் சிறிலங்கா இராணுவம் பெரும் முட்டுக்கட்டை போட்டுள்ளது

நாளாந்தம் தென்பகுதியில் பொருள்களை நிறைத்துவரும் லொறிகள் பல வவுனியா ஈரப்பெரியகுளத்தில் இராணுவத்தின் அனுமதி மறுப்பிற்கு உட்படுத்தப்படுகின்றன.

பல நாட்களாக தவம்கிடந்து இராணுவத்தின் சோதனைக்கு உட்படுத்தப்படும் இந்த லொறிகள் வடபகுதிக்கு பொருள்களுடன் செல்வதற்கு இராணுவத்தால் தடைவிதிப்பிற்கு உள்ளாகின்றன.

சந்திரிகா அரசினால் தடைவிதிக்கப்பட்ட பொருள்களும், அனுமதி பெறப்பட்ட பொருள்களும் சமீபகாலமாக இராணுவத்தால் தீவிரமாக சோதனைக்குள்ளாகின்றன.

இதன் காரணமாக நூற்றுக்கும் மேற்பட்ட லொறிகள் மீள தென்பகுதி சென்று தடைவிதிக்கப்பட்ட பொருள்களை இறக்கிவிட்டு வருகின்றன.

சில லொறிகளின் பொருள்கள் ஈரப்பெரிய குளத்தில் வைத்து இராணுவத்தால் பறிமுதல் செய்யப்படுகின்றன.

இதேசமயம் தடை தளர்த்தப்பட்ட பொருள்களை சிறியளவில் எடுத்துவரப்படுவதற்கும் தாண்டிக்குளம் தடைமுகாமில் சிறிலங்கா இராணுவத்தினர் தடைவிதித்திருப்பதாக அறியப்படுகின்றது. (தி)

## ‘வொய்ஸ் ஒவ் அமெரிக்கா’ ஒப்பந்தம் மீளாய்வுசெய்ய அமைச்சரவை உ...

## கொல்லப்பட்டோர் தொகை அதிகமாயிருக்கலாம்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டம் வாகரைப்பகுதியில் நேற்று விடுதலைப் புலிகளின் கண்ணிவெடித் தாக்குதலில் ஐந்து சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 20 பேர் காயமடைந்தனர். இராணுவத்தினர் பயணம் செய்த பஸ் வண்டியொன்றின் மீதே இந் நிலக் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தப்பட்டது. இத் தாக்குதலால் பஸ் வண்டி சிதறிச் சின்னாபின்னமாகியது. இதேவேளை கொல்லப்பட்டவர்கள் இதைவிட அதிகமாக இருக்கலாம் என பி. பி. ஸியின் சிங்கள சேவை செய்தியாளர் தெரிவிக்கின்றார்.

இதுகுறித்து தகவல் வெளியிட்ட சிறிலங்கா இராணுவத்தைச் சேர்ந்த பிரிகேடியர் நிஹால் ஜெயக்கொடி பிற்பகலில் இச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவித்தார்.

பனிச்சங்கேணிக்கும் கஜுவத்தைக்கும் இடையில் இப் பஸ் சென்று கொண்டிருந்த போது இக் கண்ணிவெடியில் சிக்கிக்கொண்டது.

இதேவேளை கொல்லப்பட்ட இராணுவத்தினரின் எண்ணிக்கை இதைவிட அதிகமானது என சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து கிடைத்த செய்திகளை மேற்கோள் காட்டி பி. பி. ஸியின் சிங்கள சேவையான சந்தேசிய தெரிவித்துள்ளது.

படையினர் பயணம் செய்த பஸ்வண்டி உருத்தெரியாமல் சிதைந்துள்ளதாகவும் அது மேலும் தெரிவித்தது.

சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக பதவியேற்ற பின்நடந்த குறிப்பிடத்தக்க பெரிய தாக்குதல் இது எனவும், சந்திரிகா குமாரதுங்க அரசாங்கத்துக்கு புலிகள் கொடுத்துள்ள மிக மோசமான பதிலடியாக இக்கண்ணிவெடித் தாக்குதல் அமைவதாகவும் பி. பி. ஸியின் கொழும்பு செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

### சுவிஸிலிருந்து இளைஞர் வெளியேற்றம்

சுவிஸில் இருந்து வெளியேற்றப்பட்ட வடமராட்சி இளைஞர் ஒருவர் தனது

### கிராண்பாஸ குண்டுவெடிப்பு விவகாரம்

## மீளாய்வுசெய்ய அமைச்சரவை உபகுழு

இரணவிலவில் அமைக்கப்பட்டு வரும் அமெரிக்க வானொலிநிலையம் தொடர்பான ஒப்பந்தத்தைத் திருத்தும் வகையில் அதிலுள்ள சில பகுதிகளை மீளாய்வு செய்யுமாறு அமைச்சரவை உபகுழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

ஜனவரி மாதம் முதல் வாரத்தில் இந்தக்குழு தனது அறிக்கையைச் சமர்ப்பிக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர்கள் லக்ஷ்மன் ஜெயக்கொடி, அனுருத்த ரத்வத்த, சி. வி. குணரத்ன, லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோர் இந்த குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

'வொய்ஸ்ஒவ் அமெரிக்கா' ஒப்பந்தம்தொடர்பாக சமய, சமூக, தொண்டர் ஸ்தாபனங்கள பல, போராட்டம்நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

---

சுவிஸில் இருந்து வெளியேற்றப்பட்ட வடமராட்சி இளைஞர் ஒருவர் தனது சொந்த இருப்பிடத்திற்கு வந்துள்ளார்.

அரசியல் தஞ்சம் கோரி மூன்று வருடங்களுக்கு மேல் தங்கியிருந்த இளைஞரை வெளியேற விதிக்கப்பட்ட காலக்கெடு முடிவடைந்ததையடுத்து இவர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டார்(யோ)

---

கிராண்பாஸ குண்டுவெடிப்பு விவகாரம்

# தடயப் பொருட்கள் சிலவற்றுடன் பொலிஸ் அதிகாரி லண்டன் பயணம்

கிராண்ட்பாஸ் குண்டுவெடிப்புச சம்பவத்தில் விசாரணைகளுக்கென சேகரிகப்பட்ட மேலும் பல பொருட்களோடு சிரேஷ்ட சி ஐ டி. அதிகாரி ஒருவர் மேல் விசாரணைகளுக்காக லண்டன் சென்றுள்ளார்.

ஸ்கொட் லண்ட்யார்ட் ஆய்வு கூடங்களில் பரிசோதனை செய்வதற்காக இத்தடயப் பொருள்கள் கொண்டு செல்லப்படுவதாகவும் லண்டன் செல்லும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரான பந்துல விக்கிரமசிங் ஸ்கொட்லண்ட்யார்ட் பொலிசாருடன் ஆலோசனைகளை நடத்துவார் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, அண்மையில் சென்னைக்கு சென்ற இரண்டு பேர் கொண்ட சி. ஐ டி பொலிஸ் குழு ராஜிவ் காந்தி கொலை விசாரணைகளை நடத்திய இந்திய பொலிஸ் அதிகாரிகளோடு ஆலோசனைகளை நடத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

# அமைச்சர் அர்ஜுன்சிங் ராஜினாமா! நரசிம்மராவிற்கு நெருக்கடி அதிகரிப்பு

[சென்னை]

இந்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் அர்ஜுன்சிங் பிரதமர் நரசிம்மராவின் அமைச்சரவையிலிருந்து ராஜினாமா செய்துள்ளார்.

அவர் தனது ராஜினாமா கடிதத்தை இந்திய ஜனாதிபதிக்கு பிரதமர் நரசிம்மராவூடாக அனுப்பி வைத்துள்ளார் என செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரதமர் நரசிம்மராவின் முக்கிய எதிர்ப்பாளராக அர்ஜுன்சிங் விளங்கியமையானது காங்கிரஸ் கட்சிக்குள் புதிய நெருக்கடி ஒன்றைத் தோற்றுவித்துள்ளது.

நேற்று அவர் அனுப்பிய ராஜினாமா கடிதத்தில், கட்சியின் கௌரவத்தையும் அரசின் நம்பகத்தன்மையையும் காக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது சிறுபான்மை மக்களை வருத்திய பாபர் மசூதி இடித்தது தொடர்பாக அரசாங்கம் பகிரங்க மன்னிப்பு கேட்கவேண்டும்.

ராஜிவ் காந்தி கொலை வழக்கை விசாரித்த வர்மா கமிஷனின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

அரசாங்கத்தின் தாராளமயமாக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கை, தாராளமயமாக்கப்பட்ட ஊழலையே குறிக்கிறது எனவும் அர்ஜுன்சிங் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்,

மேலும் கட்சியின் செயற்குழுவில் தான் தொடர்ந்தும் பதவி வகிக்கப் போவதாக அர்ஜுன்சிங் கூறியுள்ளார்.

இதேவேளை, அர்ஜுன்சிங்கின் ராஜினாமா தேவையற்ற நடவடிக்கை என மகாராஷ்டிர முதலமைச்சரும்-நரசிம்மராவின் இன்னொரு எதிர்ப்பு அணித் தலைவருமான சரத்பவார் தெரிவித்துள்ளார்.

---

# இனவாதத்தால் முடியாததை மதவாதத்தால் சாதிக்க முயற்சி

(லண்டன்)

இனவாதத்தினால் நாட்டின் தலைமையை கைப்பற்ற முடியாத சிலர் மதவாதங்களின் ஊடாக அதனைக் கைப்பற்ற முயல்வதாக லண்டன் பி. பி. ஸியின் சிங்கள சேவை தெரிவித்துள்ளது.

இனவாதத்தைக் கிளறியவர்கள் தாங்கள் தோல்வி கண்ட நிலையில் பாப்பாண்டவர் தொடர்பான கருத்துக்களை பூதாகாரப்படுத்தி வருகிறார்கள். இதற்கு கத்தோலிக்க திருச்சபை தகுந்த விளக்கமொன்றை தந்த நிலையிலும் மதவாதங்கள் தொடர்வது ஆபத்தான கட்டத்திலேயே முடிவடையும் எனவும் தெரிவித்துள்ளது.

---

யாழ் போதனா வைத்தியசாலை

# செஞ்சிலுவை தொண்டர் வேலை நிறுத்த எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவமனை கொடுப்பனவு சேவை இலங்கை செஞ்சிலுவைச் சங்க தொண்டர் ஒருவர் தகுந்த காரணமின்றி 10 நாட்கள் இடைநிறுத்தப்பட்டமையின் எதிரொலியாக தொண்டர்களை வேலை நிறுத்தத்தில் ஈடுபடுமளவுக்கு நிலைமை சென்றுள்ளது.

மேற்படி தொண்டர் சேவையில் உள்ள தொண்டர்கள் யாழ்கிளை செயலாளர், நல்லூர் கிளை தலைவர் மீது தமக்குள்ள வெறுப்பையும் அதிருப்தியையும் மகஜர் ஒன்றின் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர். இம் மகஜரில்,

தொண்டர்களாகிய எங்களை யாழ். கிளைசெயலாளரும், நல்லூர் பிரிவு தலைவரும் தங்கள் இஷ்டப்படி பழிவாங்கலும் துஷ்பிரயோகம் செய்தலும், எங்கள் தொண்டர்கள் சேவையை உதாசீனப்படுத்துவது போலாகும். தங்களின் தனிப்பட்ட பிரச்சினைகளை

(8ஆம் பக்கம் பார்க்க)

---

# திருச்சபையும் பாப்பரசரும் மதவாதத்தை கிளறுகின்றனர்

## நளின் டி சில்வா

(கொழும்பு)

மதவாதத்தை நாம் ஏற்படுத்தவில்லை. கத்தோலிக்க திருச்சபையும் பாப்பரசருமே மதவாதத்தை முன்னின்று நடத்துகின்றனர்என கலாநிதி நளின் டிசில்வா தெரிவித்துள்ளார்.

பி. பி. ஸியின் சிங்கள சேவையான சந்தேசியவுக்கு அளித்தபேட்டியில் அவர் இக்கருத்தை வெளியிட்டுளார். அவர்மேலும்தெரிவிக்கையில் மதத்தைக் காப்பாற்றவும் - அதன் மீது திணிக்கப்பட்ட களங்கத்தைநீக்கவும் எடுக்கப்படும் முயற்சிகள் எவ்வாறு மதவாதமாக முடியும்? பாப்பரசரின் கருத்துக்கள் தான் மெய்யானவை என கத்தோலிக்க திருச்சபை கூறுமாயின் அவர்கள் ஒரு திறந்தவிவாதத்

(8ஆம் பக்கம் பார்க்க)

---

# பேராசிரியர் துரைராசாவிற்கு கௌரவப்பட்டம்

யாழ். பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசாவிற்கு பேராதனைப் பல்கலைக்கழகம் கௌரவப் பட்டம் வழங்கியுள்ளது.

அண்மையில் அங்கு நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் இப் பட்டம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

---

# போரை நிறுத்துவதற்கான அறிகுறிகள் அதிகரிப்பு

## கொழும்பு பேராயர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் நடைபெறும் போரை நிறுத்துவதற்கான அறிகுறிகள் முன்பிருந்ததைவிட தற்போது அதிகம் காணப்படுவதாக கொழும்பு பேராயர் நிக்கலஸ் மார்க்கஸ் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலிலும், ஜனாதிபதித் தேர்தலிலும் நல்லெண்ணம் கொண்ட மக்கள் நாட்டில் அமைதி உருவாகவேண்டுமென்ற நோக்கத்தில் வாக்களித்ததால் தான் சந்திரிகா குமாரதுங்கா ஆட்சியைக் கைப்பற்றினார் எனவும் பேராயர் தெரிவித்துள்ளார்.

# வரி விளம்பரம்

### இறைச்சிக்கோழி விற்பனை

இறைச்சிக்கோழி குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. எந்நேரமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு:- 698/15 சபாபதி வீதி தலையாழி, வைரவர் கோவிலுக்கண்மையில், யாழ்.
[10442]

### அல்சேஷன் நாய்

நல்லின அல்சேஷன் நாய்க் குட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு: 698/15 சபாபதி வீதி, தலையாழி வைரவர் கோயிலுக்கண்மையில், யாழ்.
(10443)

### CSA
### கணனி வகுப்புக்கள்

7மாத Data Processing & Basic Programming ஆரம்பம் 28-12-94 காலை 8.30 மணி. பல்கலைக்கழகம் புக இருப்பவர்களுக்கு ஏற்றது. Computer Science Academy Navalady Lane, Thirunelvely.
(சி-10923)

### மொத்த விற்பனை

கிறிஸ்மஸ் சோடனை, அழகுசாதனப் பொருட்கள், றேடியோ, கைக்கடிகாரம், எவர்சில்வர் பிளாஸ்ரிக் பொருள்கள், பாடசாலை- தையல் உபகரணங்கள், அப்பியாசப் புத்தகங்கள், பொலித்தீன் வகைகளை மொத்தவிலையில் பெற்றுக் கொள்ளுங்கள் ஜெயா அழகு மாடம், 187, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-10902)

### தவறிவிட்டது

சுன்னாகம் மக்கள் வங்கி காசோலை ஒன்று 23-12-94 பிற்பகல் மருதனாமடம் சந்தியிலிருந்து மானிப்பாய் வீதி- உரும்பராய் - பலாலி வீதி- திருநெல்வேலிச் சந்திக்கிடையில் தவறிவிட்டது. இக்காசோலையைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.
(10492)

### விநியோகம்

---

## கிறிஸ்மஸ் விழா

எக்காளத்தொனி பூரண சுவிசேஷ சபை
21, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

26-12-1994 மாலை 6 மணிக்கு ஒளிவிழா நடைபெறவுள்ளது. தலைமைப்போதகர் அருட்திரு. மேர்வின் குணச்செல்வம் அவர்கள் தேவ செய்தி வழங்குவார். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(10493) சபைப் போதகரும் விசுவாசிகளும்

## வாழ்த்துகிறோம்



### திரு. ஆசைப்பிள்ளை ஞானசேகரம்

(ஸ்கிறீன் பிறிண்டிங் நிபுணர், ஞானம் ஆட்ஸ் அன் அட்வடைசிங்ஸ் நிறுவன இயக்குனர்)

யாழ். மாவட்டத்தில் தொழில்சார் துறையில் யாழ் றோட்டறிக் கழகத்தின் பாராட்டு விருது பெற்ற ஞானம் அண்ணரையும் விருது வழங்கிய கழகத்தாரையும் வாழ்த்துகிறோம்.

மண்ணின் பெருமைதனை மாற்றானுக்கு
சொல்லி வைக்கும் தொழில்சார் நிபுணர்கள்
வாழ்க! வளர்க வையகம் போற்ற வாழ்க.

லீலா வெதுப்பகம் & லீலா விற்பனைச் சோலை
25- 12- 94 சங்கானை, சண்டிலிப்பாய்
(10496)

## அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு

எமது மன்றத்தின் அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு இன்று பிற்பகல் 3 மணிக்கு (25- 12-1994) யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ஆகவே அனைத்து துறைசார் வர்த்தகர்களும், பொதுமக்களும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

செயலாளர்

வடபிராந்திய யாழ் ஆங்கில மருந்து வணிகர் மன்றம்

(சி-11004)

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

---

## வாடிக்கையாளர்களுக்கு எமது உளங்கனிந்த நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்

உங்கள் மங்கள வைபவங்களை அதியுயர் நவீன தொழில் நுட்பத்துடன் வீடியோ, ஸ்ரில் படப்பிடிப்புகளாக பதித்திட,

**ஒளிப்பட கலையகம்**
(கே. எஸ். ஆர். போட்டோஸ்)
766, காங்கேசன்துறை வீதி,
தட்டாதெருச்சந்தி.

**தலைமையகம்:**
12 A, கந்தபுராண வீதி,
கந்தர்மடம்.

(10473))

### உங்களுக்கு! சவுக்கம் கன்றுகள் தேவையா?

★ மிகக்குறைந்த விலையில் உற்பத்தி செலவுடனேயே வழங்கப்படுகின்றது.

★ பொலித்தீன் பைக்கற்றுகளில் நன்கு பராமரிக்ப்பட்ட சவுக்கம் கன்றுகள் ஐந்து ரூபா மட்டுமே.

உங்கள் தேவைக்கு :-
சூழல் பாதுகாப்பு நிறுவனம், மணல்காடு, தமிழீழம்.
அல்லது சூழல் பாதுகாப்புப் பகுதி, த. பொ. மே. நிறுவனம் தாவடி தமிழீழம்

''மலரும் புதிய ஆண்டிலும் மரநடுகையை தொடருவோம்''
(சி- 11005)

## விற்பனையாகிறது

தகரம் பெரிய பீலி - 6 அடி 32 G
தகரம் பெரிய பீலி - 10 அடி 30 G
தகரம் சிறிய பீலி - 6 அடி 32 G
தகரம் சிறிய பீலி - 10 அடி 32 G

அஸ்பெஸ்டஸ் சீற்பிளேன் 4 அடி X 4 அடி
**(ASBESTOS SHEET)**
அஸ்பெஸ்டஸ் சீற்பீலி 10 அடி

த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்
248/1 கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-10966)

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

---

## நினைவு கூருகின்றோம்...

### 25.12.1994

1985-ம் ஆண்டு இதேதினத்தில் வீரச்சாவெய்திய,
★ **நாகமணி தேவசகாயம்** (தம்பிலுவில் - அம்பாறை)

1986-ம் ஆண்டு மட்டு- கோட்டைக்கல்லாறுப் பகுதியில் தேசவிரோதிகளுடனான சமரில் வீரச்சாவெய்திய,
**லெப். சசி** (பொன்னையா சிறிதரன்- குருமண்வெளி- மட்டு)

திருநெல்வேலியில் இந்தியப்படையினரால் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,
**ரஞ்சன்** (இ. பாஸ்கரன் - பொற்பதி வீதி)

1990-ம் ஆண்டு மயிலவெட்டுவான் பட்டகல் ஆற்றில் மூழ்கியதில் எமைப் பிரிந்த,
**கொனிற்- கென்றி** (பூபாலசிங்கம் தர்மலிங்கம்- வந்தாறுமூலை - மட்டு)

1992-ம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் சுகவீனம் காரணமாக எமைப் பிரிந்த துணைப்படைவீரரான
**ஜேம்ஸ் ராஜ்பக்ச** (முள்ளிவாய்க்கால் மேற்கு -முல்லைத்தீவு)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும் கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினராலும் இந்தியப்படையினராலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-11003)

## பெண் நூலகர் தேவை

நூலக விஞ்ஞானம் படித்துள்ள பெண் நூலகர் தேவை.
விபரங்களுக்கு 29-12-1994 அன்று சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

முகவரி:- பாரதி படிப்பகம்,
பெண்கள் ஆய்வு நிறுவனம்,
இராச வீதி, கல்வியங்காடு,
கோப்பாய்.

(10494)

## கராத்தே சுற்றுப்போட்டி

யாழ் மிட் ரவுண் ரொட்டறிக் கழகம் 18, 19 ஆம் திகதிகளில் மின்னொளியில் நடாத்திய கராத்தே சுற்றுப் போட்டியில் அக்கடமி ஒவ் ஒறியன்ரல் மார்ஷல் ஆட்ஸ் ''சோட்டோக்கான்'' கராட்டி கழகம் ஈட்டிய வெற்றிகள்.

**(A. O. M. A)**

| காட்டாப்போட்டி 15வயதிற்குகீழ் | காட்டாப்போட்டி 15வயதிற்குமேல் |
|---|---|
| மஞ்சள் பட்டி | மஞ்சள் பட்டி |
| 1-ம் இடம் - ச. பிரதீபன் | 1-ம் இடம் - மா. ஜீவானந்தம் |
| 2-ம் இடம் - பா. கிருஷாந் | 2-ம் இடம் - நே. ரமேஸ் |

## விநியோகம் இடமாற்றம்

சூழலின் பாதுகாப்பைப் பேணும் பொருட்டும் விறகுத் தேவையை ஓரளவு பூர்த்தி செய்யும் வகையிலும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் காட்டு மர நாற்று மேடை திட்டமொன்றை செயற்படுத்தி மரக்கன்றுகளை விநியோகித்து வருவது தெரிந்ததே.

அந்த வகையில் இதுவரை காலமும் சுன்னாகத்தில் உள்ள காமதேனு பண்ணையில் நடைபெற்று வந்த விநியோகம் இடமாற்றப்பட்டு தற்போது இருபாலை வீதி, கோண்டாவிலில் அமைந்துள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன யாழ் மாவட்ட செயலகத்திற்கு அருகாமையில் விநியோகிக்கப்படுகின்றது எனவும்,

இதில் வேம்பு, மலைவேம்பு, இலுப்பை, வாகை, புளி, தேக்கு, வெல்வேல், கருவேல் போன்ற பலஇன மரக்கன்றுகள் நாற்று மேடையில் உற்பத்தி செய்யப்பட்டு வெற்று பரல்களில் 04 அடி தொடக்கம் 05 அடி உயரமாக வளர்க்கப்பட்ட கன்றுகளும், பால்மா உறைகளில் வளர்க்கப்பட்ட கன்றுகளும் விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சூழல் பாதுகாப்பு பகுதியினர் தெரிவிக்கின்றனர்.

## ஒளி விழா

(குருநகர்)

யாழ் - பிரதான வீதி திருமறைக் கலாமன்ற அரங்கில் எதிர்வரும் 28ஆம்திகதி புதன் கிழமை மாலை 6.30 மணிக்கு ''ஒளிவிழா'' நடைபெறும்.

ஒளி விழாவில் வில்லுப்பாட்டு, ''பயணங்கள்'' நாடகம், கிறிஸ்மஸ் கீதங்கள் என்பன இடம் பெறுமென அறிவிக்கப்படுகிறது. (21)


# தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ். மாவட்டம்

## மீள் பதிவிற்கான அறிவித்தல்

★ யாழ். மாவட்டத்தில் இயங்கும் சகல தனியார் கல்வி நிறுவனங்கள்/பிரத்தியேக வகுப்புகள்/09 பேருக்கு குறைந்த மாணவர்களைக்கொண்ட வகுப்புகள் அனைத்தும் தங்களது பதிவுகளைப் புதுப்பித்தல் வேண்டும்.

★ மீள் பதிவுகள் மேற்கொள்ளப்படும் காலம்

26-12-94 திங்கள் 9. 00-12.00 மணிவரை
28-12-94 புதன் 9. 00-2 .30 மணிவரை
30-12-94 வெள்ளி 9. 00-12.00 மணிவரை

★ மீள் பதிவுகள் பின்வரும் அலுவலகங்களில் மேற்கொள்ளப்படும்

யாழ் கோட்டம், மருதனார்மடம் கோட்டம், பண்டத்தரிப்புக் கோட்டம்

யாழ். மாவட்ட ஒன்றிய அலுவலகம்
19. செம்மணி வீதி, யாழ்ப்பாணம்.

வடமராட்சிக் கோட்டம்
சதாபொன்ஸ்
மாலுசந்தி

தென்மராட்சிக் கோட்டம்

சுஷாந்தீஸ்
23, டச்சு வீதி, சாவகச்சேரி,

★ மீள் பதிவிற்கு கட்டணம் எதுவும் செலுத்தத் தேவையில்லை.

★ மீள்பதிவு செய்யாத கல்வி நிறுவனங்கள்/பிரத்தியேக வகுப்புகள் 31-12-94க்கு பின்னர் இயங்க அனுமதிக்கப்படமாட்டா.

தலைவர்

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ். மாவட்டம்

(சி-10983)



1-ம் இடம் - ச. பிரதீபன்
2-ம் இடம் - பா. கிருஷாந்
3-ம் இடம் - வே- ஜனார்த்தனன்

நீலப் பச்சை
1-ம் இடம் - M. S பார்த்திபன்
2-ம் இடம் - S. சந்திரகாந்தன்
3 ம் இடம் - M. S. அருச்சுனா

நாவல் பட்டி
1-ம் இடம் - த. முகுந்தன்
2-ம் இடம் - ரி. துஷானந்
3-ம் இடம் - க. சதீஸ்

15 வயதுக்கு மேல் மண்ணிறப்பட்டி
காட்டாப்போட்டி
1-ம் இடம் - M. திருச்செல்வம்
2-ம் இடம் - அ லயனல்
3-ம் இடம் - N. தேவானந்தன்

சண்டைப் போட்டி 55Kgக்கு கீழ்
நீலப்பச்சை
1-ம் இடம் - S. ஞானசேகரன்
2-ம் இடம் - செ. ராஸ்கின்
3-ம் இடம் - வி. மோகனதாஸ்

நாவல் பட்டி
1-ம் இடம் - N. கஜேந்திரன்
2-ம் இடம் - எ. அகிலரசன்
3-ம் இடம் - சி. சுரேஸ்

மண்ணிறப்பட்டி
1-ம் இடம் - த. அருணோதயன்
2-ம் இடம் - செ. இளங்கோ
3-ம் இடம் - K. உதயசூரியா

1-ம் இடம் - மா. ஜீவானந்தம்
2-ம் இடம் - நே. ரமேஸ்
3-ம் இடம் - ப. செந்தூரன்

நீலப்பச்சை
1-ம் இடம் - A- அன்பரசன்
2-ம் இடம் - இ. காண்டீபன்
3-ம் இடம் - கு. ஜெயக்குமார்

நாவல் பட்டி
1 ம் இடம் - பி. அன்ரோ டினேஷ்
2-ம் இடம்- த. முகுந்தன்
3-ம் இடம் - ம. குகதீஸ்வரன்

கறுப்புப்பட்டி
காட்டாப்போட்டி
1-ம் இடம் - ஜெ .ஜெயரஞ்சன்
2-ம் இடம்- சி.கலிங்ரஸ்
3-ம் இடம் - ந. சுபாகரன்

சண்டைப் போட்டி 55Kgக்குமேல்
நீலப்பச்சை
1-ம் இடம் - வி. வின்ஸ்லோ
2-ம் இடம் - P.R யோகராஜா
3-ம் இடம் - வ. முரளிதாஸ்

நாவல் பட்டி
2-ம் இடம் - த. ஜெகதீஸ்வரன்
3-ம இடம் - R.M. ஜோய் ராஜ்குமார்

மண்ணிறப்பட்டி
1-ம் இடம் - அ. லயனல்
2-ம் இடம் - பூ. பிரபாகரன்
3-ம் இடம் - க. அருளழகன்

கறுப்புப் பட்டி சண்டைப் போட்டி
1-ம் இடம் - சி. கலிங்ரஸ்
2-ம் இடம் - சிறி சுரேந்திரகுமார்
3-ம் இடம் - அலக்ஸ்சாண்டர்

குழுப் போட்டி
1-ம் இடம் - குகநாதன், குயின்ரன், சசிகரன்
2-ம் இடம் - சயந்தன், குனேந்திரன், பிரிவிராஜ்

**இப்போட்டியில் பங்குபற்றிய அனைத்து A.O.M.A கழக வீரர்களை A.O.M.A கழக ஆசிரியர்கள் மனமார்ந்த பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கிறார்கள்.**

(10495)

# உதைபந்தாட்ட முன்னணி வீரருள் ஒருவரான சிந்துவுடன் ஒரு நேர்காணல்

இன்றைய உதைபந்தாட்டவீரர்களில் முன்னணி வீரர்கள் யார் என்று கேட்டால் ரசிகர்கள் இனங்காட்டுபவர்களில் சிந்துவும் ஒருவராக இருக்கின்றார். கிருஷ்ணபிள்ளை சிறிதரன் எனும் இயற்பெயர் கொண்ட சிந்து 65-06-23-ல் பிறந்தவர். தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக்கொண்டவர். தற்போது நான்காண்டுகளாக ஏழாலையில் வசிக்கிறார். ஞானமுருகன் அணியின் முன்னணி வீரர். யூனியன் கல்லூரியின் பழைய மாணவர். தன் திறமையான விளையாட்டால் ரசிகர்களின் மனதில் இடம்பிடித்துக் கொண்டவர். தன் எதிர்த்தரப்ப வீரன் காயம்பட்டுவிடக் கூடாது என்பதில் அதிக அக்கறைகொண்டவர். விளையாட்டரங்கு சார்பாக சிந்துவை நானும் நண்பர் எஸ். தயாபரனும் செவ்விகண்டோம்.

☐ உங்கள் உதைபந்தாட்ட பிரவேசம் எவ்வாறு அமைந்தது?

நான் பாடசாலையில் கற்கும் காலத்திலேயே பல்வேறு விளையாட்டுகளிலும் ஈடுபடுவதுண்டு. 79-ல் 2-ம், 3-ம் நிலைக் குழுக்களில் உதைபந்தாட்ட வீரனாக இருந்தேன். இதுதவிர மெய்வல்லுநர் போட்டிகள், கிரிக்கெட் போன்றவற்றிலும் ஈடுபட்டேன். இக்காலகட்டம் ஒரு சாதாரண காலகட்டம் என்றே கூறவேண்டும். எனது சிறிய தோற்றமும் அவ்வளவு வாய்ப்பாக அப்போது அமையவில்லை.

☐ கழக உதைபந்தாட்டப் போட்டிகளில் எவ்வாறு அறிமுகமானீர்கள்?

83 - 88 காலப் பகுதியில் கிராஸ் கொப்பர்ஸ் அணியுடன் இணைந்து விளையாடினேன். உ. அ. அதிபர் பிரிவு சுற்றுப் போட்டியில் நாங்கள் தெல்லிப்பழை திருமகள் வி. கழகத்தை வென்று சாம்பியனானோம். இதனை எனக்கு தன்னம்பிக்கை தந்ததொரு சுற்றுப் போட்டியாக கொள்ளலாம். அதோடு கழகநிலையில் விளையாட ஆரம்பித்த காலத்தில் இருந்தே அணியின் எல்லா நிலைகளிலும் விளையாடிக் கொண்டு வருகின்றேன்.

☐ உங்கள் முன்னேற்றத்திற்குக் காரணமானவர்?

எனது ஆசான் ரி. பத்மநாதன்தான். உதைபந்தாட்டத்தில் மட்டுமல்ல கரபந்தாட்ட ஆசானும் அவர்தான். கிராஸ் கொப்பர்ஸ் அணிக்கு என்னை அறிமுகம் செய்த...

கான் இராஜசிங்கம். இவரும் நானும் ஒன்றாகக் கிராஸ் கொப்பர்ஸ் அணியில் விளையாடினோம்.

☐ சில காலம் நீங்கள் கழகங்களில் ஆடவில்லையல்லவா?

இரண்டு வருடங்கள் 88 - 89-ல் நான் குவைத் நாட்டில் தொழில் நிமித்தம் இருந்தேன். அங்கு நான் உதைபந்தாட்டத்தில் ஈடுபட்டேன். எமது நிறுவனத்திற்குள்ளேயே அணிகள் இருந்தன. பிலிப்பைன்ஸ் அணி, தாய்லாந்து அணி, வங்காளதேச அணி, யாழ்ப்பாண அணி என்றவாறு அணிகள் இருந்தன. கூடுதலாக யாழ் இளைஞர்களைக் கொண்ட யாழ்ப்பாண அணியில் நானும் விளையாடினேன். ஒரு சுற்றுப் போட்டியில் எமக்கும் பிலிப்பைன் அணிக்கும் இறுதியாட்டம் வந்து 2-0 என நாங்கள் வெற்றி கண்டோம். குவைத்திலும் என் திறமையை வளர்த்துக் கொள்ள வாய்ப்புக் கிடைத்தது.

☐ குவைத்தில் இருந்து நாடு திரும்பிய பின்...?

1991-ல் கிராஸ்கொப்பர்ஸ் அணி, கணேசன் அணி என்ற பெயருடன் சுற்றுப் போட்டிகளில் பங்குகொள்ளலாயிற்று நானும் இவ்வணியில் இணைந்து விளையாடினேன். இக்கட்டத்தில் இரண்டு சுற்றுப் போட்டிகளில் பங்குகொண்டு இரண்டிலும் இறுதி வெற்றியை அடைந்தோம். 92-ல் இருந்து ஞானமுருகன் அணியில் இணைந்து விளையாடுவதுடன் அணித் தலைவராகவும் இருக்கின்றேன்.

☐ உங்கள் சூழல் விளையாட்டுக்கோ, உல்லாசத்திற்கோ வாய்ப்பான சூழலாக தெரியவில்லையே..

மிகக் கடினமான சூழல். கடின உழைப்பு. குறைந்த வருமானம். இருந்தும் பழைய விளையாட்டு வீரர்களின் உற்சாகம். வழிகாட்டல் எனது மனஉறுதி என்பவற்றால் ஒரு மேனிலையைப் பேணிக் கொள்ள முடிகின்றது.

☐ அணித்தலைவர் என்ற வகையில் கழகத்தின் ஒத்துழைப்பு எப்படி?

அணிவீரர்கள் என்னை நேசிப்பவர்கள். எல்லா வீரரும் சமமானவர்கள் என்று நான் நடத்துபவன். நல்ல புரிந்துணர்வுண்டு. எல்லோ...

கழகச் செயலாளரும் நான்தான்.

☐ நீங்கள் இக்கிராமத்துக்கு வந்து சில காலமேயாயினும் பெரும் செல்வாக்குப் பெற்றுள்ளீர்களல்லவா?

நிச்சயமாக அதற்குக் காரணம் என் உழைப்புத்தான். இந்தக் கிராமத்துக்கு செய்ய வேண்டியது நிறைய இருக்கிறது. இந்தக் கிராமம் எனக்கு எதைச் செய்ததோ அதனை நான் இந்த சிறிமுருகன் பாடசாலைக்கு செய்யவேண்டும். இப்பொழுதுகூட இந்தச் சிறுவர்களுக்குஎன்னாலான பணிகளைச் செய்துகொண்டிருக்கிறேன்.



சிந்து

☐ உங்கள் கழகப் பயிற்றுநர் யார்?

அப்படியாரும் இல்லை. அதற்கான வாய்ப்பும் வசதியும் இல்லை. நாங்களே எங்கள் கழகத்தினரைப் பயிற்றுவிக்கிறோம். மேலும் B, C என இரு அணிகள் உண்டு. அவற்றின் பயிற்றுனர்கள் A கழக வீரர்களே.

☐ உதைபந்தாட்ட வன்முறைகள் இவ்விளையாட்டின் சாபக்கேடாக அமைந்துள்ளதே?

உண்மையில் ஒருசில ரசிகர்களாற்றான் பிரச்சினைகள் ஏற்பட்டு அது வன்முறைவரை வளர்ந்து செல்கின்றது. இதனைக்கொண்டு ஒருகழகத்...

ஆதரவானவர்கள் அல்லஎன்பது தெளிவாகத் தெரிந்ததொரு உண்மை.

☐ நீங்கள் மைதானத்தினுள் நுழையும்போது எதனை மனத்திற் கொண்டு இறங்குகிறீர்கள்?

நிச்சயமாக வெற்றிதோல்வியை மனதிற்கொண்டல்ல. மத்தியஸ்தரின் விசிலுக்கு விளையாட வேண்டும் என்பதையே முதலாவதாக மனதில் இருத்திக்கொள்வேன். ஆட்டத்தின் இறுதிக் கட்டங்களில் முறைதவறிய ஆட்டங்கள் தவிர்க்க முடியாதவைதான். ஆனாலும் விசிலுக்கு விளையாடப் பழகிக் கொண்டால் அவையும் கூடத்தவிர்க்கப்பட்டுவிடும். என்னைப் பொறுத்தவரை எனக்கு முறை தவறி அடித்தாலும் நான் என் எதிரணி வீரனுக்கு அடிக்கமாட்டேன்.

☐ சிறிமுருகன் பாடசாலையின் உதைபந்தாட்டப் பயிற்றுநராக கடமைபுரிகின்றீர்கள் அல்லவா?

எல்லா விளையாட்டுக்களிலும் இப்பாடசாலை மாணவர்களுடன் தொடர்புபடுகின்றேன். உதைபந்தாட்டத்தைச் சிறப்பாகக்கூறலாம். 93ல் தான் உதைபந்தாட்டத்தை அறிமுகம்செய்தோம். இது கிராமியப் பாடசாலை வசதிகள் வாய்ப்புகள் மிகக்...

த்தியுள்ளேன். இங்கு நிறைய வீச்சுள்ள பிள்ளைகள் இருக்கிறார்கள். எதிர்கால ஞானமுருகன் வீரர்கள் இங்கு உருவாகிக் கொண்டிருக்கிறார்கள்.

☐ சிந்துவைப் போலவா?

சிந்துவை விடவும் திறமைசாலிகள் வீச்சுக் கொண்டவர்கள். ஆனால் சிந்துவிடம் உள்ள துன்பங்கள் அவர்களிடம் வந்து விடக்கூடாது அதற்காகத்தான் நான் கஷ்டப்படுகிறேன்.

☐ பாடசாலை நிர்வாகத்தினர் ஒத்துழைப்பிற்குக் குறைவானதென்று எண்ணுகிறோம்?

அதிபர் திரு யோகசிங்கம், ஆசிரியர்கள் அதோடு கிராம மக்கள் எல்லோரிடமிருந்தும் நிறைந்தஆதரவுஎனக்குண்டு. கிராமமக்கள் தம் பிள்ளைகளைத் தாமே என்னிடம் கொண்டு வந்து ஒப்படைக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு.

☐ பாடசாலை வீரர்கள்கூட (மிகச் சிலர் தான்) ரசிகர்களின் அபிப்பிராயத்தில் இருந்து தாழ்ந்து விடுகிறார்களே ?

அவர்கள் அறியாப்பிள்ளைகள் விளையாட்டின் ஆர்வத்தால் திடீரென்று உணர்ச்சிவசப்பட்டு விடக்கூடும் மென்மையான முறையில் இதமாக எடுத்துக் கூறினால் மீண்டும் பிழைவிடமாட்டார்கள் ஒழுக்கம் என்பது மாணவர்கள விரும்பாததல்ல. அதனை அவர்கள மனதில் பதிப்பது எமது கையில் தான் உண்டு. மைதானத்தின் உள்ளேயும், வெளியேயும்-

☐ இன்று போட்டிகள் அதிகம், தரம் குறைவு என்று ஒரு அபிப்பிராயம் நிலவுகிறதல்லவா?

இன்று தரம் சிறிது குறைந்துதான் உள்ளது. இதற்குக் காரணம் இன்றைய சூழல் தான். எல்லா வசதிகளும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன அல்லவா சிறிமுருகன் வித்தியாலயம் மட்டுவிலுக்கு ஒரு ஆட்டத்துக்குப் போக வேண்டும், துவிச்சக்கரவண்டியில் போய் விளையாடவேண்டும் வசதியை ஏற்படுத்தப் பணம் இல்லை. கழகங்களை எடுத்துப் பாருங்கள் யங்கென்றீசன் அணியினர் இடம் பெயர்ந்து எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள். சென் அந்தனிஸ், பாடும்மீன் அணியினருக்குக் கண்ணுக் கெட்டிய தூரத்தில்...

☐ நீங்கள் முன்னணி வீரன் என்ற பெயரை எவ்வாறு மேலும் வளர்த்துக்கொள்ளப் போகிறீர்கள்?

இன்றுள்ளதரத்தைப்பேணிப்பாதுகாத்துக்கொள்ளவேண்டும். அதற்குமேலாக நான் பயிற்றுவிக்கும் மாணவர்களை முன்னணிக்குக்கொண்டு வரவேண்டும் அதுவேமுக்கியம்.

☐ ரசிகர்கள் உங்கள் மேல் நல்லதொரு அபிமானம் வைத்திருக்கிறார்கள் அல்லவா?

நிச்சயமாக அது எனக்குத் தெரியும். ஒவ்வொரு உதைபந்தாட்ட வீரனும் மிக நேசிக்க வேண்டியது ரசிகரைத்தான். எமமை எடைபோடுபவர்கள் அவர்கள். நான் நல்ல முறையில் ஆடினால் அவர்கள் மனதில் இருப்பேன் இல்லாவிட்டால் தூக்கி எறிந்து விடுவார்கள். சில ரசிகர்கள் அன்பின் மிகுதியால் ''உனக்கு அடிக்கிறான் நீயும் திருப்பியடியடா'' என்றும் கத்துவார்கள் அதுவும் அன்புதான். ஆனால் அந்த அன்பை நான் ஏற்க முடியாதல்லவா?

☐ நீங்கள் ரசிகருடன் பகிர்ந்து கொள்ளக் கூடிய சில சம்பவங்கள்!

நிறைய உள்ளன. ஒன்றிரண்டைக் கூறுகிறேன். 91 ல் நடைபெற்ற மேஜர் காசிம் நினைவுச் சுற்றுப் போட்டி. கால் இறுதியாட்டமொன்றில் ஆட்டம் முடிய 7 நிமிடங்கள் மாத்திரம் இருந்தன நாங்கள் 1 - 4 என்று பின்னிலையில் இருந்தோம். அடுத்த 7 நிமிடங்களில் நான் 3

**நிர்மலன்**

கோல்கள் அடித்து 4 - 4 என்றாக்கினேன். பின்னர் அவ்வாட்டத்தில் நாங்கள் பெனால்டியில் தோற்றோம்.

93ல் தென்மராட்சி மோகனதாஸ் வி க நடாத்திய சுற்றுப்போட்டியில் எமக்கும் பண்டிதர் குடியிருப்பு வி கவுக்கும் இடையில் இறுதியாட்டம் நடைபெற விருந்தது. எதிரணி மிகப் பலமான அணியாக இருந்ததால்எம் மால்...

டனர். அணியில் பாபுவும் இல்லை. ஆட்டம் தொடங்கியது. ஒருவாறு இடைவேளையின் போது 1-0 என முன்னணியில் நின்றோம். அதன் பின் அதீ தைரியம் பெற்று இன்னும் 6 கோல் அடித்து 7-0 என வென்றோம். இது ஒரு பெருஞ் சாதனை.

☐ உங்களுக்குப் பிடித்த உதைபந்தாட்ட வீரர் யார்?

வெள்ளை. அதீத திறமை கொண்டவர் மிகச் சிறந்த பண்பாளர். அவரின் திறமைகள் அதியுயர் தரத்திலானவை. நாங்கள் என்னதான் சிறந்த வீரர்கள் என்று பெயர் பெற்றாலும் கூட எங்களை விட வெள்ளை ஏதோ ஒரு விதத்தில் உயர்வானவர் தான்.

சிந்து எம்முடன் உரையாடிய காலப்பகுதி, சத்திரசிகிச்சை ஒன்றுக்காகத் தந்தையை யாழ் போதனா வைத்தியசாலையில் வைத்திருந்த காலம். தினமும் மூன்று வேளை நகரத்துக்குச் சென்று தந்தையைப் பார்த்துவரவேண்டும்.

வீட்டுப் பொறுப்புகளைக் கவனிக்கவேண்டும் மிட்ரவுண் றோட்ரக்ட் சுற்றுப்போட்டியிலும் பங்குகொள்ள வேண்டும் நேர்காணல் ஒன்றுக்குத் தன் மன நிலையையும் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த இறுக்கமான சூழ்நிலையில்அவரதுதன்னம்பிக்கையையும் மன ஓர்மத்தையும் நன்குணர்ந்து கொண்டோம். இவர்கள் 4 ஆண் பிள்ளைகள். தமையன் குகதாசன் சிறந்ததொரு உதைபந்தாட்டவீரர். தம்பி தேவதாசன் இருவரும் கழக விளையாட்டு வீரர்கள். சிந்து இன்னும்திருமணமாகாதவர். தந்தையார் உதைபந்தாட்ட ரசிகன் தன் விளையாட்டின் மீது மிகுந்த அக்கறை கொண்டவர் என்கிறார். பொருளாதார நிலைகள் வளமாக இல்லைதான். இருந்தாலும் தந்தையைப் பார்க்க வைத்தியசாலைக்குப் போனால் ஆட்டம் தோல்வியா, வெற்றியா என்று தான் விசாரிப்பார் என்கிறார் சிந்து. உரையாடலின் போது 92-ல் விழுந்த அடிகளின் பாதிப்பு தனக்கு இப்போது தான் தெரிகிறது என்கிறார். நல்லதொரு விளையாட்டு வீரன்.

விளையாடிக் கொண்டு வருகின்றேன்.

☐ உங்கள் முன்னேற்றத்திற்குக் காரணமானவர்?

எனது ஆசான் ரி. பத்மநாதன்தான். உதைபந்தாட்டத்தில் மட்டுமல்ல கரபந்தாட்ட ஆசானும் அவர்தான். கிராஸ் கொப்பர்ஸ் அணிக்கு என்னை அறிமுகம் செய்து வைத்ததும் அவர்தான். என்றும் மறக்கப்படமுடியாதவர். உடற்பயிற்சி போன்ற துறைகளில் எனக்குதவியவர் றொ

றது.

☐ அணித்தலைவர் என்ற வகையில் கழகத்தின் ஒத்துழைப்பு எப்படி?

அணிவீரர்கள் என்னை நேசிப்பவர்கள். எல்லா வீரரும் சமமானவர்கள் என்று நான் நடத்துபவன். நல்ல புரிந்துணர்வுண்டு. எல்லோருக்கும் சந்தர்ப்பம் கொடுப்பது வழக்கம். நாங்கள் எல்லோரும் கிராமத்து இளைஞர்கள். எம்மிடம் பிணைப்பு மிக அதிகம். மேலும்

☐ உதைபந்தாட்ட வன்முறைகள் இவ்விளையாட்டின் சாபக்கேடாக அமைந்துள்ளதே?

உண்மையில் ஒருசில ரசிகர்களாற்றான் பிரச்சினைகள் ஏற்பட்டு அது வன்முறை வரை வளர்ந்து செல்கின்றது. இதனைக்கொண்டு ஒருகழகத்தையோ, அல்லது வீரரையோ குறைகூறுவதை என்னால் ஒப்புக்கொள்ள முடியாது. ரசிகர்களின் பெரும்பான்மையோர் வன்முறைக்கு

எல்லா விளையாட்டுக்களிலும் இப்பாடசாலை மாணவர்களுடன் தொடர்புபடுகின்றேன். உதைபந்தாட்டத்தைச் சிறப்பாகக்கூறலாம். 93ல் தான் உதைபந்தாட்டத்தை அறிமுகம்செய்தோம். இது கிராமியப் பாடசாலை வசதிகள் வாய்ப்புகள் மிகக் குறைவு. நிறையவே பணியாற்றவேண்டும். மைதானமும் வாய்ப்பாக இல்லை இருந்தும் மனப்பூர்வமாக இப்பணியில் என்னை ஈடுபடு

விளையாடவேண்டும் வசதியை ஏற்படுத்தப் பணம் இல்லை. கழகங்களை எடுத்துப் பாருங்கள் யங்கென்றீசன் அணியினர் இடம் பெயர்ந்து எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள். சென் அந்தனிஸ்,பாடும்மீன் அணியினருக்குக் கண்ணுக் கெட்டிய தூரத்தில் ஆபத்து. எமக்கு ஆபத்து ஒன்றரை ஏமலுக்கு அப்பால். இந்த அடிப்படையில் உதைபந்தாட்ட வீரர்கள் எவ்வளவு பாவம்.

93ல் தென்மராட்சி மோகனதாஸ் வி க நடாத்திய சுற்றுப்போட்டியில் எமக்கும் பண்டிதர் குடியிருப்பு வி கவுக்கும் இடையில் இறுதியாட்டம் நடைபெற விருந்தது. எதிரணி மிகப் பலமான அணியாக இருந்ததால்எம்மால் பயப்படாமல் இருக்க முடியவில்லை. பெரிதும் மனக்கிலேசம் அடைந்திருந்தோம். வெற்றிஎதிரணிக்கேஎன்று ரசிகர்கள் ஆட்டம் தொடங்கும் முன்னமே தீர்மானித்து விட்

போனால் ஆட்டம் தோல்வியா, வெற்றியா என்று தான் விசாரிப்பார் என்கிறார் சிந்து. உரையாடலின் போது 92ல் விழுந்த அடிகளின் பாதிப்பு தனக்கு இப்போது தான் தெரிகிறது என்கிறார். நல்லதொரு விளையாட்டு வீரன். அவ்விளையாட்டின் காரணமாகவே தன் உடல் நிலையில் தாக்கங்கள் ஏற்பட்டுள்ளதாகக் கூறிய போது மிகுந்த வேதனையாக இருந்தது.

# லெப். கேணல்மதிவெற்றிக்கேடயத்தை ஞானமுருகன் அணி வென்றது

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்பட்ட லெப்.கேணல்மதி ஞாபகார்த்தசுற்றுக்கேடயத் திற்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிகள் கடந்த 10-ம் திகதி மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

விலகல் முறையில் அமைந்த இச்சுற்றுப் போட்டியில் மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து, ஞானமுருகன் (பி) அணி மோதியது. முதல் அரைப்பாதியில் ஆட்டம் சோபிக்காத போதிலும் இடைவேளையின் பின் ஆட்டம்இறுக்கமடைந்தது. முதல் அரைப்பாதியில் விநாயகர் வி. க. 2-1 என்ற கோல் வித்தியாசத்தில் முன்னணியில் இருந்தது.

இடைவேளையின் பின் விநாயகர் வி. க. அணியினர் மேலும் ஒரு கோலை பெற்றனர் 3-1 என்ற நிலையில் இருக்கும் போது ஞானமுருகன் (பி) அணியினர்சில நிமிடங்களில் அடுத்தடுத்து இரு கோல்களை போட்டு ஆட்டத்தை மேலும் விறுவிறுப்படைய செய்தனர். ஆட்டம் முடிவடைய மூன்று நிமிடங்கள் இருக்கையில் விநாயகர் அணியின் முன் வரிசை வீரர் முரளி தனது அணிக்காக ஒரு கோலை போட்டு தமதுஅணிக்கு வெற்றியை தேடிக் கொடுத்தார். 4-3 என்ற கோல் வித்தியாசத்தில் விநாயகர் வி. க. வெற்றிபெற்று மூன்றாம் இடத்திற்கு தெரிவானது.

இவ்வாட்டத்திற்கு மத்தியஸ்தராக தனராஜரட்ணம் அவர்களும் உதவி மத்தியஸ்தராக திருவாளர்கள் அற்புதநாதனும், சிவராசாவும் கடமையாற்றினர்.

கடந்த இருவருட சம்பியன்களாக இருந்த விநாயகர் விளையாட்டுக் கழகம் இம்முறை மூன்றாம் இடத்திற்கு தள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து இடம்பெற்ற முதலாம் இடத்திற்கான ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் (ஏ) அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் மோதியது அருகருகே அமைந்த இரு கிராமங்களை சேர்ந்த இவ்விரு அணிகளும் ஆடுவதென்றால் பொதுவாகவே ரசிகர்கள் கூட்டம் அதிகரித்துக் காணப்படுவது வழக்கமானதொன்றாகும்.

பெருந்தொகையான ரசிகர்களின் கரகோசத்துடன் ஆரம்பமான இவ்வாட்டத்தில் ஆட்டம் ஆரம்பித்து அரைப்பாதி வரை இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைக்காமல் ஆடிக் கொண்டு இருந்தன. யாழ் மாவட்டத்தின் முன்னணி வீரர்களான வெள்ளை, சிந்து, ஆகியோர்

**இ. சிறிதரன்**

இரு அணிகளிலும் முன்வரிசை வீரர்களாக ஆடுபவர்கள் என்பதால் இரு அணிகளும் தத்தமது பிற்காப்பு அரண்களை பலப்படுத்தியிருந்தமையினால் ஆட்டம் அரைப்பாதிவரை இரு அணிகளும் கோல் எதுவும் போட முடியாமல் போனது.

இடைவேளையின் பின் மீண்டும் ஆட்டம் ஆரம்பித்த போது இரு அணிகளும் மேலதிக வீச்சைகாட்டி ஆட ஆரம்பித்தன ஞான முருகன் அணியில் இடது பக்க முன்வரிசை வீரர்றதீஸ்வரன் பந்தினைசில கடவைகள் முன் நோக்கி கொண்டு சென்று கோல் போட எடுத்த முயற்சிகளை றோயல் அணியின் பிற்காப்பு வீரர்கள் திறமையாக முறியடித்தனர்.

ஆட்டம் முடிவடைவதற்கு 4 நிமிடங்கள் இருக்கையில் ஞானமுருகன் அணியின் முன் வரிசை வீரர்களின் இணைந்த முயற்சியினால் ஒரு கோல் பெறப்பட்டது. அந்த ஒரு கோலையும் அணித்தலைவர் சிந்து பெற்றுக் கொடுத்தார். கடுமையான ஆட்டத்தின் பின் 1 - 0 என்ற கோல் வித்தியாசத்தில் ஞானமுருகன் அணியினர் இவ்வாண்டு லெப். கேணல். மதி ஞாபகார்த்த சுற்றுக் கேடயத்தை சுவீகரித்துக் கொண்டனர்.

இவ்வாட்டத்திற்கு மத்தியஸ்தராக திரு தம்பிராஜாவும் உதவி மத்தியஸ்தராக திருவாளர்கள் அற்புதநாதனும் சிவராஜாவும் கடமையாற்றினர்.

(ஆஷஸ் டெஸ்ட் கிரிக்கெட் தொடர்)

# இங்கிலாந்தால் முதல் போட்டியில் ஈடுகொடுக்க முடியவில்லை

இங்கிலாந்தும் அவுஸ்திரேலியாவும் சநதித்துக் கொள்ளும் ஆஷஸ் ஐந்து டெஸ்ட் போட்டித் தொடர் இவ்விரு நாடுகளைப் பொறுத்தவரை முதன்மையானதும் கூடிய கௌரவத்திற்குரியதுமாகும். இவ்வகையில் கடந்த முறை தாம் இழந்த ஆஷஸ் விருதை எப்படியும் மீளப்பெற வேண்டும் என்ற நோக்கிலேயே இங்கிலாந்து அவுஸ்திரேலியாவிற்குச் சென்றது. பல பிராந்திய ஆட்டங்களில் கலந்து கொண்ட இங்கிலாந்து கடந்த 25ஆம் திகதி தனது முதலாவது டெஸ்ட் போட்டியை பிரிஸ்பேன் நகரில் தொடங்கியது.

தென் ஆபிரிக்காவை தம் மண்ணில் சந்தித்த இங்கிலாந்து 3 டெஸ்ட் போட்டிகளில் சிறப்பாக மீள எழுந்து சமன் செய்து கொண்டது. அதே வேளை பாகிஸ்தானில் ஒரு டெஸ்டில் அரும்பொட்டில் தோற்ற புதிய இளம் அணியான அவுஸ்திரேலியா தலை நிமிர்ந்தே தயகம் திரும்பியது. இந்நிலையில் இரண்டு அணிகளும் பலம் வாய்ந்த நிலையிலேயே சந்தித்துக் கொண்டன.

முதலில் துடுப்பாட்டத்தை ஆரம்பித்த அவுஸ்திரேலியா ஆரம்பத்தையே சிறப்பாக ஆரம்பித்தது. முதல் நாள் ஆட்டம் முடிவடையும் போது அவுஸ்திரேலியா 4 இலக்கு இழப்பிற்கு 329 ரண்களைக் குவித்தது. இதில் தன் முத்திரையை சர்வதேச உலகில் ஊன்றிப் பதித்து வரும் மைக்சிலேட்டர் 176 ஓட்டங்களைப் பெற்றார். இது இவரது ஐந்தாவது சதம். அணித்தலைவர் மார்க்டெயிலர் 59 ஓட்டங்களுடன் வீணாக றன் அவுட் முறையில் ஆட்டமிழந்தார். மார்க்வோ ஆட்டமிழக்காது 82 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

2-ம் நாள் தொடர்ந்து ஆடிய அவுஸ்திரேலியா சகல இலக்குகளையும் இழந்து 426 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது 2-ம் நாளின் சிறப்பு மார்க்வோ பெற்ற 140 ஓட்டங்கள். அவுஸ்திரேலியாவின் இறுதி 5 இலக்குகளும் 75 ஓட்டங்களுக்குச் சரிக்கப்பட்டன. தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து ஆட்டம் முடியும் போது 6 இலக்கு இழப்பிற்கு 133 ஓட்டங்களையே பெற்றது. அணித்தலைவர் மைக்அத்தர்டன் தவிரஏனையோர் நிலை தடுமாறிப் போனார்கள். 3-ம் நாளில் மிக விரைவாக இலக்குகளை இழந்தஇங்கிலாந்து 167 ஓட்டங்களிற்கு முற்றாக இலக்கிழந்தது. மைக்அத்தர்டன் பெற்ற ஓட்டங்கள் 54. அனுபவம் நிறைந்தவரும் முதன்மை வேகப்பந்து வீச்சாளருமான கிரெய்க் மக்டேமட் 6 இலக்குகளைச் சரிக்கசேர்ன் வோர்ண், ரிம்மே இருவரும் 3,1 என்ற இலக்குகளைச் சரித்தனர் மக்டேமட் முதல் மூன்று இறுதி மூன்றெனறு தலையாலும், வாலாலும் கிள்ளி எறிந்துவிட்டார்.

இந்நிலையில் அவுஸ்திரேலியா இங்கிலாந்தை மீளத் துடுப்பாட அழைத்திருக்க வேண்டும், ஆனால் பயிற்றுநர் பொபிசிம்ப்பசனும், அணித்தலைவரும் தாமே மீண்டும் துடுப்பாட எண்ணினர். இதற்கு முக்கிய காரணம் இறுதி நாளில் விளையாட்டுத்தளம் சுழல் பந்துவீச்சாளருக்கு வாய்ப்பாக அமையும் என்பதே. இவர்களின் மனதில் இருந்தவர் சேர்ன்வேர்ண் ஆகத்தான் இருக்க வேண்டும். எனவே 3-ம்நாள் முடியும் போது அவுஸ்திரேலியா 141க்கு 3 என்றிருந்து. ஆட்ட முடிவின் போது 195/7 என்ற நிலையில் தளர்ந்தது. இருந்தும் மொத்தத்தில் இறுதி நாள் இங்கிலாந்துக்கு எப்படி இருக்கும் என்பதை இப்பொ

(7ஆம் பக்கம் பார்க்க)

## புஸ்பா அன் கோ

பல் பொருள் வாணிபம்
இல. 293, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

## கணேசானந்தா பட்டு மாடம்

இல. 15, சிறப்பு அங்காடி,
யாழ்ப்பாணம்.

இன்றைய அறிமுகம் நாளைய நாகரிகம்

## விதுரா ஆடை அகம்

இல. 34, சிறப்பு அங்காடி (உட்புறம்),
யாழ்ப்பாணம்.

## லலிதா பட்டுச் சோலை

இல. 5, 6, சிறப்பு அங்காடி,
யாழ்ப்பாணம்.
பட்டுப் புடவைகளிற்கு பெயர் பெற்ற ஸ்தாபனம்.

## சிவகணேசன் பட்டுச் சோலை

இல. 41, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
தரமான ஜவுளிகளிற்கு தனிப் பெரும் நிறுவனம்.

## சோதி புடவை அகம்

இல. 14, சிறப்பு அங்காடி,
யாழ்ப்பாணம்.
முகூர்த்த பட்டுப் புடவைகளுக்கும், ரவிக்கைத் துணிகளுக்கும் பெயர் பெற்ற ஸ்தாபனம்.

## கல்யாணி குளிரகம்


# மீட்பர் இயேசு

# சிறப்பு

## தனது பிறப்பினால் மனித குலத்தை மகிமைப்படுத்திய இயேசுகிறிஸ்து

இன்றைய தினம் கிறிஸ்துவின் பிறப்பை உலக மாந்தர் அனைவரும் அக்களிப்புடன் கொண்டாடும் தினமாகும். இன்று பெற்றோர் தம் பிள்ளைகளுக்கும், நண்பர் நண்பர்க்கும், உறவினர் உறவினர்க்கும் பரிசில்கள் வழங்கி மகிழும் தினமாகும். கவலையில் கலங்குவோரும் உழைப்பில் உழல்வோரும பகைமையில் பாசமிழந்து திரிவோரும் கவலை மறந்து, உழைப்பு மறந்து, பகைமையை மறந்து களிப்புடனும் பாசத்துடனும் பணபாடும் மகிழ்ச்சி பொங்கும் திருநாளாகும்.

இறைவனின் புனிதத்தை ஏழை எளியவர், அநாதைகள் ஆதரவற்றவர், ஒடுக்கப்பட்டவர் என அனைவரும் அடைந்து சொள்ள இயேசு கிறிஸ்து உலகிற்கு வந்தார்.

இக் கிறிஸ்து பிறப்பு விழாவின் பின்னணியை ஆராயுமிடத்து, கடவுள் தம் ஞானத்திலும் நன்மைத்தனத்திலுமிருந்து உருவான அறிவிற்கெட்டாத திட்டத்தால் உலகனைத்தையும் படைத்தார். இப்படைப்பனைத்திற்கும் சிகரமாகவும், தலைவனாகவும் மனிதனைப் படைத்தார். அவனுக்கு இறைவாழ்விலே பங்கு தர ஆசை கொண்டார். எனவே மனிதனை தமது சாயலாகப் படைத்தார்.

ஆனால் ஆதிமனிதன் ஆண்டவரின் கட்டளையை மீறி அவரது அன்புறவை முறித்துக் கொண்டான். இறைவன் அளித்த இறை வாழ்வையும் நன்மைத் தனத்தையும், தனக்கும்தன்சந்ததிக்கும் இல்லாத படி இழந்து போனான். இதனால் பெரும் அவல நிலைக்கு உள்ளாகி துன்பப்பட்டான். இதைக்கண்ட கடவுள் மனம் நொந்தார். தாம் உருவாக்கிய தமது சாயலைக் கொண்ட மனிதன் அழிந்து போவதை அவர் விரும்ப வில்லை. எனவே பாவச்சேற்றில் சிக்கி மூழ்கிய மனிதனை மீட்க திட்டம் ஒன்றை உருவாக்கினார்.

இத்திட்டத்தின் முதற் படியாக மீட்பரை அனுப்புவதாக வாக்களிக்கின்றார். அதுவும் தாமே அவ்வாறு சென்று மீட்க விரும்புகின்றார். மனிதனின் கீழ்ப்படியாமைக்குப் பதிலாக தாம் மனித உருவிலேயே வந்து மீட்க திருவுளங் கொண்டார். இதையே 'கடவுள் தன்மையில் விளங்கிய அவர் கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை விடாமல் பிடித்துக் கொண்டிருக்க வேண்டிய தொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் தன்மை பூண்டு மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி தம்மை தாழ்த்தினார். [பிலி 2 : 6 - 8] என்று வேதாகமம் கூறுகின்றது.

கடவுள் மீட்பரை அனுப்புவதாக வாக்களித்த படியால் மக்களும் அவரை ஆவலுடன் எதிர்பார்க்கத் தொடங்கினர். தமது திட்டத்தை நிறைவேற்ற இறைவன் தமக்கென ஒரு இனத்தைத் தெரிந்தெடுத்தார். இதுவே இஸ்ராயேல் இனமாகும். இவர்களை மீட்புத் திட்டத்திற்குப் பண்படுத்த அபிரகாமை கடவுள் தெரிந்தெடுக்கின்றார்.

...யம் செய்ய ஊழியர் இருக்கவில்லை, நடுங்கும் கடுங்குளிரில், தாழ்மையின் உருவாக, தாம் பிறக்கவே இடமில்லாமல் தவிக்கும் நிலையில் மாட்டுத் தொழுவத்தில் வந்து அகதியாகப் பிறந்தார்.

கடவுளின் மீட்பு அனைத்து உலக மாந்தருக்கும் உரியது என்பதைக் காட்ட எளியவராகிய இடையர் முதல், அரசர், வேற்றினத்து ஞானிகள், உலகமக்கள் அனைவருக்கும் இயேசுவின் பிறப்பு அறிவிக்கப்பட்டது.

> தமது சாயலைக் கொண்ட மனிதன் அழிந்துபோவதைகடவுள் விரும்பவில்லை எனவே பாவச் சேற்றில் சிக்கி மூழ்கிய மனிதனை மீட்க திட்டமொன்றை உருவாக்கினார்.
>
> ★———★
>
> திட்டத்தின் முதற்படியாக மீட்பரை அனுப்புவதாக வாக்களிக்கின்றார். அதுவும் தாமே மனித அவதாரம் எடுத்து மனிதனை மீட்க விரும்புகின்றார்.

இறைமகன் மனித உரு எடுத்த மேலான நிகழ்ச்சியைக் கிறிஸ்மஸ் விழாவாகக் கொண்டாடுகின்றோம். இக் கொண்டாட்டத்தில் நாம், புத்தாடை அணிதல், பல்சுவை உணவுகள் உண்ணுதல், ஆடம்பரம், கேளிக்கைகள், களியாட்டங்கள் இவற்றுக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றோம். ஆனால் இறைவன் விரும்புவதோ எமது உள்ளத்தூய்மையையும். இதய சமாதானத்தையும் இறை உறவில நெருங்கி வாழ்வதையும், இந்த உறவின் முதிர்ச்சியில் நாம் அயலவருடன் அன்புடனும் சமாதானத்துடனும் வாழ வேண்டும். இதையே இறைவன் விரும்புகின்றார்.

கிறிஸ்மஸ் அன்று நாம் நம் அயலவருக்குத் தேவையான உணவு, உடை இன்னும் மகிழ்வூட்டும் அன்பளிப்புகள் அளிப்பது கடவுளின் அன்புச் செயலை கூர்வதாக



பெயர் பெற்ற ஸ்தாபனம்.

## கல்யாணி குளிரகம்

(கல்யாணி கிறீம் கவுஸ்)

இல. 73, லெப். கேணல் சந்தோசம் தெரு,

(கஸ்தூரியார் வீதி)

யாழ்ப்பாணம்.

## அம்பிகை களஞ்சியம்

இல, 304, கேணல் கிட்டு சாலை,

(ஆஸ்பத்திரி வீதி)

யாழ்ப்பாணம்.

பலசரக்கு பொருட்கள் மற்றும் சீமெந்து, அஸ்பெற்றஸ் சீற் மொத்தமாகவும, மலிவாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

விழி உங்களிடம் அதன் ஒளி எங்களிடம்

## எரிக் கணேஸ்

மூக்குக் கண்ணாடி விற்பனையாளர்

இல. 566, கேணல் கிட்டு சாலை

(ஆஸ்பத்திரி வீதி)

யாழ்ப்பாணம்

## கபிலா காலணியகம்

இல. 4, லெப். கேணல் சந்தோசம் தெரு,

(கஸ்தூரியார் வீதி)

யாழ்ப்பாணம்.

Kabila Shoo Palace

நவநாகரிக காலணிகளிற்கு கபிலா


[பிலி 2 : 6 - 8] என்று வேதாகமம் கூறுகின்றது.

கடவுள் மீட்பரை அனுப்புவதாக வாக்களித்த படியால் மக்களும் அவரை ஆவலுடன் எதிர்பார்க்கத் தொடங்கினர். தமது திட்டத்தை நிறைவேற்ற இறைவன் தமக்கென ஒரு இனத்தைத் தெரிந்தெடுத்தார். இதுவே இஸ்ராயேல் இனமாகு.ம. இவர்களை மீட்புத் திட்டத்திற்குப் பண்படுத்த ஆபிரகாமை கடவுள் தெரிந்தெடுக்கின்றார். ஆபிரகாம் கடவுளுக்குகந்த மனிதராக மற்றெல்லா மனிதருக்கும் முன்மாதிரிகையாக, விசுவாசத்தின் தந்தையாக வாழ்ந்து இறைவனின் இனத்தை வழி நடத்தினார். இவரைப் போலவே மோயீசன, சவுல், தாவீது, சாலமோன் போன்றவர்கள் வாழ்ந்தார்கள். இவ்வாறு கடவுளின் இனம் நல்லினமாக உருவாக இறைவனைச் சார்ந்த பல்வேறு மனிதர்கள் வழி காட்டினார்கள். இவர்கள் குல முதுவர்கள், நீதிபதிகள், அரசர்கள், இறைவாக்கினர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். இறைவன் இஸ்ராயேல் மக்களுடன் துணை நின்று இவர்கள் இறை சட்டத்தை மீறும் போது வழிகாட்டிகளைக் கொண்டு வழி நடத்தினார். நல்வழிக்குத் திருப்பினார். இவ்வாறு வந்த கடவுளின் மனிதர்கள் மீட்க வரப்போகும் கடவுளின் சாயலைக் கொணடு அவருக்கு முன்னடையாளமாக வாழ்ந்து காட்டினர். கடவுள் இயேசு உருவில் பிறக்கப் போவதை அவர் மனித இனத்தை மீட்கப் போவதை இறைவாக்கினர் வழியாக இறைவன் தன்இன மக்களுக்கு வெளிப்படுத்தினார். இவ்வாறு செய்து வந்த இறைவன் காலம் நிறைவேறியபோது மனித..னத் தமது நிலைக்கு உயர்த்த தாம் மனிதனாக தூய ஆவியானவரால் உருவாகி பரிசுத்த கன்னிமரியாளிடம் உருபவித்துப் பறந்தார்.

ஆதிப்பெற்றோரின் பாவத்தால் ஆண்டவனின் அன்புப் பிணைப்பிலிருந்து அகன்று, அலகையின் அடிமையாகி அழுதழுது அழிந்து கொண்டிருந்த அகந்தை கொண்ட மனிதனை அந்த அழிவிலிருந்து மீட்டு இரட்சிக்க, உடைந்த உறவை இணைத்து நம்மை இறைவனுடன் மீண்டும் உறவாக்க, அடிமை விலங்கை உடைக்க, அனைத்து மக்களையும் ஒன்று சேர்க்க உன்னததேவன் இவ்வுலகிலே மனிதனானார்.

மக்களின் எதிர்பார்ப்போ தம்மை மீட்க வருபவர் வல்லமை மிகுந்த அரசனாக, மாட மாளிகைகளில், பெரும் செல்வச் செழிப்பில், அரசியல் விடுதலை பெற்றுத் தருபவராக வருவார் என எதிர்பார்த்தனர். ஆனால் அவரோ மாடமாளிகையில் பிறக்கவில்லை, பஞ்சு மெத்தையில் பிறக்கவில்லை, பட்டாடை அணியவில்லை, ஊழி



அமைய வேண்டும். இதுவே கிறிஸ்மஸ் விழாவை உண்மையான சிறப்புடன் கொண்டாடுவதாகும். அப்போது தான் இறைமகன் இயேசு உலகிற்கு கொணர்ந்த சமாதானமும் மகிழ்ச்சியும் நமக்குக் கிடைக்கும். அதை விடுத்து அரைவயிற்றுக் கஞ்சியும் இல்லாமல் வாடும் வறியவரின் பசியைப் போக்காமல் நாம் மட்டும் அறுசுவை உணவு உண்பது, உண்மையான கிறிஸ்மஸ் கொண்டாட்டமாகாது

### ஆசிரியர்: மலக்கியாஸ்

வாட்டும் குளிரில் தவிக்கும் ஏழையைக் கண்டும் அவன் குளிரைப்போக்க துணி கொடுத்து உதவாமல் கிறிஸ்மசுக்காக நாம் மட்டும் புத்தாடை உடுத்திக் கொள்வது பொருளுள்ள கிறிஸ்மஸ் கொண்டாட்டமாகாது. இறைவன் வந்து மனிதனுடன் உறவு கொண்டதுபோல நாமும் பிறருடன் உறவு கொண்டு அன்புடன் வாழவேண்டும் இது உண்மையான கிறிஸ்து பிறப்பு விழாவாகும்.


## பி. ஐ. பெர்னான்டோ

இல. 542, கேணல் கிட்டு சாலை, யாழ்ப்பாணம்.

வைத்திய நிபுணர்களின் ஆலோசனைக்கு அமைவாக இளமைத் தோற்றத்திற்கும் அழகுக்கும் உரிய மூக்குக் கண்ணாடிகளை நீங்கள் விரும்பிய வகையில் தெரிவு செய்யவும் அழகிய பற்களைக் கட்டுவதற்கும் நீண்டகால அனுபவமுள்ள ஸ்தாபனம்.



UNIK

# ...சுவின் பிறப்பு ... இதழ்

## ‘கிறிஸ்மஸ்தாத்தா’

### இரு பாரம் பரிய கதைகள்

‘‘கிறிஸ்மஸ் தாத்தா’’ தோன்றிய வரலாறு பற்றி பல்வேறு கதைகள் உலகெங்கும் கூறப்படுகிறது

இவற்றில் ஒன்று 4- ம் நூற்றாண்டில் ‘‘மீரா’’ நகரின் ஆயராக இருந்த ‘‘நீக்கிலஸ்’’ ஆண்டகையின் பரோப உபகாரங்களின் பயனாக அந்நகரத்து மக்கள் மனதில் எழுந்த கற்பனை வடிவம் ‘‘கிறிஸ்மஸ் தாத்தா’’ வாக உருப்பெற்றது. என ஆயர் தொடர்பான வரலாற்றுக் கதை கூறுகிறது

16- ம் நூற்றாண்டில் ‘‘மீரா’’ நகரில் நீக்கிலஸ் ஆண்டகை தமது மறைப்பணியைச் செய்து வந்தார். இவர் ஏழை மக்களின் ஏழ்மையை போக்குவதிலும் அவர்களின் துயர்களை துடைப்பதிலும் மிகவும் சுறுசுறுப்பாக செயற்பட்டு வந்தார். அளப்பரிய பரோஉபகாரங்களை செய்து வந்த அவர், பரோஉபகாரங்களை செய்யும் பொழுது தன்னை யார் என்று அடையாளம் காட்டுவதற்குக் கூட விரும்பியதில்லை.

ஓர் ஏழைக் குடியானவன் தன்னுடைய வயதிற்கு வந்த மூன்று பெண் பிள்ளைகளில் ஒன்றிற்காவது திருமணம் செய்து வைக்க பணமில்லாமல் அல்லும் பகலும் மனக்கவலையால் வாடி வதங்கிக் கொண்டிருந்தான். இதை அறிந்த ஆயர் நீக்கிலஸ் அந்த குடியானவனின் குடிசைக்குச் சென்று அவனது வீட்டின் புகைப் போக்கி வழியாக பொற்காசு மூடைகள் மூன்றை யாரும் அறியாமல் போட்டார்.

அதனைப் பெற்றுக் கொண்ட குடியானவன் தனது மூன்று பெண்பிள்ளைகளிற்கும் சிறப்பாக திருமணம் செய்து வைத்தான்.

இவ்வாறு அந்த மக்களிற்கு சேவை செய்த ஆயரை அந்த மக்களால் மறக்க முடியவில்லை.

இந்த ஆயர் நீக்கிலசின் நினைவாக அந்த ‘மீரா’’ நகரத்து மக்கள் தங்கள் மனங்களில் உருவாக்கிய பாத்திரம்தான் ‘ கிறிஸ்மஸ் தாத்தா.’’

இவ்வாறு ஆயரின் வாழ்க்கை வரலாறுடன் தொடர்பு பட்ட கதை கிறிஸ்மஸ் தாத்தா பற்றி கூறுகிறது.

மேலிட்ட நிலையில் அவரது கற்பனையில் உதித்த பாத்திரம் தான் ‘‘கிறிஸ்மஸ் தாத்தா’’ என்றும் கூறப்படுகிறது.

இந்த பேராசிரியர் கற்பனைப் பாத்திரத்தை ஒரு பாடல் மூலம் தனது பிள்ளைகளிற்கு விளக்குகின்றார். அதைக் கேட்ட அவரது குழந்தைகள் மீண்டும் மீண்டும் அப்பாடலைப் பாடி மகிழ்ந்தனர்.

இப்பாடல் மக்களால் பெரிதும் விரும்பப்பட்டு இசைக்கப்பட்டது. இதனால் இது உலகெங்கும் பரவ ஆரம்பித்தது. இதைக்கேட்ட இசைத்த மக்கள் இப்பாடலின் கருத்திற்கு அமைய கிறிஸ்மஸ் பண்டிகையின்பொழுது கிறிஸ்மஸ் தாத்தாவின் உருவத்தை அமைத்து அலங்கரித்து மகிழ்ந்தனர்.

இவ்வாறு கிறிஸ்மஸ் தாத்தாவின் இன்னும் ஒரு வரலாற்றுக்கதை கூறுகிறது.

பாவச்சிறையில் இருந்து மனிதகுலத்தை மீட்பதற்காக ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து மனித அவதாரம் எடுத்து உலகிற்கு வந்தார்.

இந்த அற்புத வரவை மகிமைப்படுத்தி மனக்களிப்புக் கொள்ளும் ஒரு உருவமாக கிறிஸ்மஸ் தாத்தாவை மக்கள் கருதுகிறார்கள்.

தொகுப்பு கெல்மன்

## கிறிஸ்மஸ் மரம்

கிறிஸ்மஸ் காலங்களில் தேவாலயங்களிலும், இல்லங்களிலும் ‘கிறிஸ்மஸ் மரம்’ வைத்து அதனை வண்ண வண்ண மின் விளக்குகளாலும், சோடனைகளாலும் அலங்கரிப்பது வழமை. எமது பிரதேசங்களில் இம் மரம் இல்லாத காரணத்தால் நாம் சவுக்கு

அன்பர்கள் நண்பர்கள்
வாடிக்கையாள பெருமக்கள்


**வி. எஸ். பி. குறூப்**
இல. 266A, அருச்சுனா சாலை,
யாழ்ப்பாணம்.

**காவேரி பட்டுச் சோலை**
இல. 48, மேஜர் சோதியா தெரு,
யாழ்ப்பாணம்.

**சிவராதா புடவை அகம்**
இல;16 B, மேஜர் சோதியா தெரு,
பெரியகடை,
யாழ்ப்பாணம்.

**துணிப் பூங்கா**
Cloth Emporium
இல. 158, சிறப்பு அங்காடி (நவீனசந்தை),
யாழ்ப்பாணம்.

**திருமாட்டி புடவைக் கடல்**
(சீமாட்டி)
இல. 122, இராசன் தெரு,
யாழ்ப்பாணம்.


**G· C· C·**
பொது வைத்திய ஆலோசனை நிலையம்
இல. 514, கேணல் கிட்டு சாலை,
(பழைய O. P. D ற்கு முன்பாக)
யாழ்ப்பாணம்
சகலவித வைத்திய ஆலோசனைகளும் நடைபெறுகிறது

**ரவர் கோப்பி அன் கூல் பார்**
(கோபுரம்)
இல. 324, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

**ச. லிங்கநாதன் வண்ணச்சோலை**
பிடவை வியாபாரம்
*S. Linkanathan Vannach Solai*
13 - 14 Grand Bazaar
Jaffna
13-14 மேஜர் சோதியா தெரு,
(பெரியகடை)

அன்பர்கள் நண்பர்கள்
வாடிக்கையாள பெருமக்கள்
அனைவரிற்கும் உளம் கனிந்த
நத்தார் புதுவருட
வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன்
இவர்கள் தெரிவித்துக்
கொள்கின்றார்கள்.

இன்னொரு கதை 1822 ம் ஆண்டு நியூயோர்க்கிலுள்ள கொலம்பியா பல்கலைக் கழகத்தல் பேராசிரியராக இருந்த க்ளெமென் சிமூர்'' என்பவர் தமது உறவினர்களுடனும், நண்பர்களுடனும் கிறிஸ்துவின் பிறப்பை கொண்டாடும்



முகமாக பரிசில்களை வழங்குவதற்கு பனித் தெருக்களில் குதிரைகள் இழுத்துச் செல்லும் ''ஸ்வெட்ஸ்'' வண்டியில் சென்று கொண்டிருந்தார். இவ்வேளை அவரிற்கு மகிழ்ச்சி

இல்லங்களிலும் 'கிறிஸ்மஸ் மரம்' வைத்து அதனை வண்ண வண்ண மின் விளக்குகளாலும், சோடனைகளாலும் அலங்கரிப்பது வழமை. எமது பிரதேசங்களில் இம் மரம் இல்லாத காரணத்தால் நாம் சவுக்கு மரங்களையே 'கிறிஸ்மஸ்' மரமாக பயன்படுத்தி வருகிறோம்.

இவ்வாறு. கிறிஸ்டஸ் மரங்களை நடும் நிகழ்வு முதன் முதலாக 1605 ஆம் ஆண்டில் ஜேர்மனியிலுள்ள 'ஸ்டிரான் பர்க்' நகரில் நடந்த கிறிஸ்மஸ் விழாவில் தான் நடைமுறைக்கு வந்தது. ஜேர்மன் நாட்டில் உதயமான இந் நிகழ்வை, உடனடியாக பின்பற்ற எல்லா நாடுகளும் முன்வரவில்லை. பிரிட்டனை விக்ரோரியா மகாராணி ஆட்சி புரிந்த காலத்தில் (1841) இல் அவரது கணவரான அல்பிரட், வின்ஸர் மாளிகையில் 'நத்தார் மரம்' ஒன்றை நட்டார். இதன் பின்னர் தான் உலக நாடுகளில் கிறிஸ்மஸ் மர நடுகை பிரபல்யமானது. இன்று எல்லா நாட்டையும் விட அமெரிக்காவில் 'கிறிஸ்மஸ் மரம்'

கி. செல்மர் எமில்

பெரும் முக்கியத்துவம் பெறுகிறது. இங்குள்ள நியூயோர்க் நகரின் 'ம்ராக் பெல்லர்' சதுக்கத்தில் ஆண்டு தோறும் நத்தார் மரம் எழுபது அடி உயரம் கொண்டதாக அமைக்கப்படுகிறது.

உலகிலேயே மிக உயரமான, கிறிஸ்மஸ் மரமும் 1950 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் வொஷிங்டன் நகரிலுள்ள 'நேர்த் கேட் சொப்பிங் சென்ரரில்' தான் அமைக்கப்பட்டது. இதன் உயரம் 221 அடியாகும்.

நத்தார் காலங்களில் 'நத்தார் மரம்' நடப்பட்டு அது அலங்கரிக்கப்படுவது எதிர்காலம் ஒளி மிகுந்ததாக இருக்க வேண்டும் என்பதையும் எடுத்துக் காட்டுவதாக அமைகின்றது.

S. Linkanathan Vannach Solai
13 - 14 Grand Bazaar
Jaffna.
13-14 மேஜர் சோதியா தெரு,
(பெரியகடை)
யாழ்ப்பாணம்.

லிங்கம் குளிர்களி நிலையம்
(லிங்கம் கூல்பார்)
வெலிங்டன் சந்தி
யாழ்ப்பாணம்.

றவி ஒளி கானம்
(சுப்பஸோ வீடியோ)
இல. 100 A, அருச்சுனா சாலை,
யாழ்ப்பாணம்.
★ அண்மையில் வெளியாகும் புதிய பாடல்கள் அனைத்தும் டிஸ்க் மூலம் பதிவு செய்யப்படும்
★ அதி நவீன கமரா மூலம் வீடியோ படம் பிடித்திடவும் நாடுங்கள்.

சாமினி இரும்பகம்
இல. 242 A, அருச்சுனா சாலை,
யாழ்ப்பாணம்.
தரமானபெயின்ற் வகைகளிற்கும் கட்டிடப் பொருட்களிற்கும் யாழ் நகரில் முன்னணி ஸ்தாபனம்.

உறுதியான கணனிக் கல்விக்கு!
UNIKCO COMPUTER CENTRE
(வெலிங்டன் சந்திக்கு அருகில்)
இல. 37 மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்
(சி-10971)

அலுவலக உபகரணங்களிற்கான
தொழில்நுட்ப நிலையம்
OFFICE EQUIPMENT TECHNICAL CENTRE
இல. 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
றோனியோ, தட்டச்சு இயந்திரங்கள் மற்றும் அலுவலக இயந்திரங்கள் திருத்தவும் தரமான றோனியோ வேலைகட்கும் அழகான தட்டச்சு வேலைகட்கும் இன்றே நாடுங்கள்!
O. E. T. C
NO. 140 Navalar Road, Jaffna.

## A|L 95
**DAY CLASSES**

பகல் நேர வகுப்புக்கள்
(A/L பரீட்சை எடுத்த மாணவர்களுக்கு)
செவ்வாய் - வியாழனில்

ஆரம்பம்: 27-12-94
(காலை 9 மணி)

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(சி-10970)

வாடிக்கையாளர் மற்றும் அன்பர்கள் நண்பர்களுக்கும் நத்தார் வாழ்த்துக்கள்!

★ உங்களுக்குத் தேவையான சகல பொருட்களையும் வழங்குபவர்கள்!

## ராஜா ஸ்ரோர்ஸ்

67, 69, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-10987)

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
நத்தார்
நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்!

## ஜெயா அழகுமாடம்

(மொத்த விற்பனைக் கூடம்)
187, மின்சார நிலைய வீதி,
(உதிரி விற்பனைக் கூடம்)
177A, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம் (சி-10986)

## எழுது வினைஞர் போட்டிப் பரீட்சை

( பயிற்சி வகுப்புக்கள் )

★ மேற்படி பரீட்சை 7 - 1 - 95இல் நடைபெற உள்ளது

மொழியறிவு



நத்தார் நன்னாளிலே
திடீர் விருந்தினருக்கு
விருந்தளிக்க தினமும்

ஜோ. எகட்டனின்

## ஜெசித்தாரா தரும்

நத்தார் வெகுமதி நாவிற்கு சுவையும்

நீங்கள் கொடுக்கும் பணத்திற்கு பெறுமதி மிக்க சுகாதாரமான பண்டங்களை, நத்தார் வெகுமதியாக தினமும் ஓடர் செய்து பெற்றுக்கொள்ளவும், அத்துடன் எமது விருந்தகத்தில் ஒன்று கூடி உண்ணலாம் **விசேஷ லம்பாரிஸ் புரியாணி**, கோழி புரியாணி (நெய்க் கலவை), ஆட்டிறைச்சி புரியாணி (நெய்க் கலவை), **Sea Food Mixed Grill** புரியாணி, பிறைட் றைஸ் (எல்லா இறைச்சி வகைகளுடன்), நூடில்ஸ் இன் **Soya Souce**

**Rice & Curry With Speci al Meat**

வீட்டிற்கு வெளியிலே ஒரு மனை
அது ஜெசித்தாரா தரும் மனை

தினமும் காலை 10.00 மணி முதல்
இரவு 7.00 மணி வரை திறந்திருக்கும்.

24, 25, 26-ம் திகதிகளில்
இரவு 10.00 மணி வரை திறந்திருக்கும்

ஜோ. எகட்டனின்

## ஜெசித்தாரா

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி.

புது யுகத்தில் புது உலகம்
ஜெசித்தாரா
எமக்கு வேறு கிளைகள் இல்லை

(சி-10975)


அரசினர் பொது வைத்தியசாலை, யாழ்ப்பாணம்
அமைய ஆண் சுத்திகரிப்புத் தொழிலாளிகள்
(மலசலகூடம்)

## வெற்றிடங்கள்

இவ் வைத்தியசாலையில் அமைய ஆண் சுத்திகரிப்பு தொழிலாளிகள் (மலசலகூடம்) பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்**

1) 8 ஆம் வகுப்பு சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2) 05. 01. 95 ஆந் திகதியன்று 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் 40 வயதுக்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
3) விண்ணப்பதாரர்கள் இவ் வைத்தியசாலையிலிருந்து 3 மைல் சுற்றாடலில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் எனது பணிமனையில் 05. 01. 95 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பதாரர்கள் பின்பு என்னால் அறிவிக்கப்படும் திகதியில் எனது பணிமனையில் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

## மருதடிக்குளம் திருத்தம்

மானிப்பாய் பகுதியில் அமைந்துள்ள மருதடிக்குளம் தற்போது தேசநிர்மாணிகளால் திருத்தப்பட்டுள்ளது.

துரித நீர்வள மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் கமநல சேவைத்திணைக்களபன்முகப் படுத்தப்பட்ட நிதியிலிருந்து இக்குளம் ஆழமாக்கப்பட்டும் அணைக்கட்டுகள் திருத்தப் பட்டும் உள்ளன.

இதன்மூலம் இப்பகுதி நிலங்களுக்கு நீர் சேமிக்கக்கூடியதாக இருக்கின்றது.

## ஆலோசனைக் கூட்டம்

1995 ஆம் ஆண்டிற்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் சம்பந்தமாக பிரதேச மட்டத்திலான மகாநாடு ஒன்று நடைபெறவுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேசத்திற்கான மேற்படி திட்டம் பற்றிய மகாநாடு எதிர்வரும் ஜனவரி மாதம் 4 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் சண்டிலிப்பாய் பிரதேச செயலக மண்டபத்தில் மேலதிக அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெறும். ஏற்கனவே தயாரிக்கப்பட்ட இவ் வரவுசெலவுத்திட்டங்கள் அன்றைய தினம் விவாதிக்கப்பட்டு பிரதேச திட்டமிடல் குழுவினால் அங்கீகரிக்கப்படவுள்ளது. இந் நிகழ்வில் யாழ் மாவட்ட பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திரு. வி. செ. சுவாமிநாதன் விசேட அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார்.

(41)

## விராட்சிக்குளம் திருத்தம்

வடமராட்சி ஊரிக்காட்டுப் பகுதியிலுள்ள விராட்சிக் குளம் தற்போது தேசநிர்மாணிகளால் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

துரித நீர்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அவசர புனருத்தாரண நிதியிலிருந்து திருத்தப்பட்ட இக்குளம் ஆழமாக்கப்பட்டு அணைக் கட்டுகளும் பலப்படுத்தப்பட்டுள்ளன.

இதன் மூலம் இப்பகுதி விவசாயிகள் பெரிதும் நன்மையடைகின்றனர்.


வாடிக்கையாளர்,
அன்பர்கள்,
ஆதரவாளர்களுக்கு
நத்தார் புதுவருட
வாழ்த்துகள்....



[illegible]

வருடம் 365
நாளும் தினமும்
காலை 11. 45 முதல் 3. 30 பிற்பகல் வரை
ஜோ. எகட்டனின் ஜெசித்தாராவின்
உணவுப் பொதிகளை தங்கு
தடையின்றி பெற்றுக்கொள்ளலாம்.

## ஜெசித்தாரா

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி.

(சி- 10976)


## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



வேலணை கிழக்கைச் சேர்ந்த
**செல்வி யோகிகா யோகராசா**
(யோ யோ)

| | |
|---|---|
| ஆனந்தக் கடலில் ஆழ்த்தி மலர்ந்தது: 22. 10. 1986 | ஆறாத்துயரில் ஆழ்த்தி மறைந்தது: 19. 12. 1989 |

திதி: 25. 12. 1994

ஆறுநாள் நோய்கண்டு அரும்பு மலர் நீயன்று
ஆடலிழந்து போய்க் கிடந்தாயே!
ஊறுண்ட உனைக்கண்டு உடனடியாய் நாமன்று
ஊர் விட்டு அம்புலன்சில் புறப்பட்டோமே!
ஆர்கண்டார்? ஆர் சொன்னார்? ஆஸ்பத்திரி வாசலிலே
அம்மா நீ போவாயென்று?
கார்கண்டமழையென்றுகாலமெல்லாம்கண் நீர்சொரிய
காத்திருக்க ஐந்தாண்டானதம்மா! - உன் படம்
பார்த்திருக்க ஐந்தாண்டானதம்மா!

மொழியறிவு
பொது உளச்சார்பு

ஆசிரியர் :- திரு. குமாரவேலு

மாதிரிப் பரீட்சை உட்பட பயிற்சி வகுப்புக்களும் நடைபெறும்

**ஆரம்பம்: 26- 12- 94**

**திங்கள் பிற்பகல் 3 மணி**

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம். (சி-10969)

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

வைத்திய கலாநிதி (செல்வி)என். கனகரட்டினம்
பணிப்பாளர் அரசினர் பொது வைத்தியசாலை,
(சி-11002) யாழ்ப்பாணம்.

வாழ்த்துகள்....

எமது மெழுகுதிரியை நத்தார் புதுவருட அன்பளிப்பாக அன்பளித்து மகிழ்ச்சி அடையுங்கள்

★ கப் மெழுகுதிரி
★ கிளாஸ் மெழுகுதிரி
★ கிளாஸ் மெழுகுதிரிக்குரிய ரீபில்கள்
★ கொப்பி வகைகள்

மொத்த விலையில் சில்லறையாக பெற்றுக்கொள்ளலாம்.

**கண்ணன் கிதை**
(மக்கள் வங்கிக்கு முன்னாக)
112, அருச்சுனா வீதி,
யாழ்ப்பாணம். (சி-10988)

காத்திருக்க ஐந்தாண்டானதம்மா! - உன் படம்
பார்த்திருக்க ஐந்தாண்டானதம்மா!

ஏங்கும் மனத்துடன் என்றென்றும் வாழ்கின்ற

4412, விதானையார் ஒழுங்கை **அப்பா, அம்மா,**
சுண்டிக்குளி, **அண்ணன்மார், உறவினர்கள்.**
யாழ்ப்பாணம். (10486)

## மலிவு விற்பனை

| | | |
|---|---|---|
| சித்தை (சைனா) | மீற். | 48-00 |
| கலர் பப்பிளின் | மீற். | 45-00 |
| J. B. சேட்டிங் | மீற் | 110-00 |
| விஸ்கோஸ் பிரின்ட் 44 அங், | மீற். | 100/-, 115/- |
| பற்றிக் சாரம் | | 110 00 |
| சூட்டிங் லெந்த் | | 190/-, 290/-, 390/- |
| ஒப்பின் ஸ்கேட் | | 220-00 |
| விஸ்கோஸ் ஸ்கேட் | | 200-00 |
| போய்ஸ் சேட் | | 125-00 |

இச்சலுகை 31- 12- 94 வரை மட்டுமே

**த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்**
(பாரதியார் சிலைக்கு அருகில்)
156, பருத்தித்துறை வீதி,
நல்லூர் (சி-10965)

"உங்களுக்கு உதவிட
எங்களுக்கு உதவுங்கள்"

மில்க்வைற் தயாரிப்புகளின் மேலுறைகளைச் சேகரித்துத் தந்து அன்பளிப்புகளைப் பெற்று மகிழுங்கள்.

10 மேலுறைகளுக்கு ஒரு "மில்க்வைற் செய்தி இதழ்" அல்லது நீதி நூல்.

25 மேலுறைகளுக்கு ஒரு அப்பியாசக் கொப்பி அல்லது யோகாசனபடம் அல்லது பெரியார் அல்லது சுவாமி படம்.

100 மேலுறைகளுக்கு ஒரு அழகிய கைத்தறி கைலேஞ்சி.


500 மேலுறைகளுக்கு ஒரு துவாய்.

(சி-10979)

இன்றைய நிகழ்வுகளை
நாளைய நினைவுகளாக்கி
நவீன தொழில் நுட்ப முறையில்
**வீடியோ படம் - புகைப்படம் எடுத்திட**

117, மானிப்பாய் வீதி, ஐந்துசந்தி, யாழ்ப்பாணம்
(சி-11001)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
9- 10- 1934

உதிர்வு
26- 11- 1994

அமரர்
**திரு. சிதம்பரப்பிள்ளை**
**அம்பலவாணபிள்ளை**
(ஓய்வு பெற்ற கிராமசேவை அலுவலர்)

நில்லா வுலகில் நிலையுறு செல்வமாம்
கல்வியிற் சிறக்க வைத்த அப்பா
அல்லும் பகலும் அயராது இறைவனை
தொல்வினை யகலத் தோத்தரித் தேநாளும்
பல்லோர் போற்றும் தொண்டுகள் செய்தே
நல்லோர் நண்ணும் மோட்ச இன்பம்
நில்லா தடைந்தீர் ஆத்மசாந்தி அடையுமாறே.

அன்னாரின் மரணச் சடங்கில் கலந்து கொண்ட அனைவர்க்கும் எமது நன்றியையும் கூறி, எமதில்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும் (26. 12. 94) நாளை மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

'பிறேம்வாசம்' **மனைவி, மக்கள்,**
பருத்தித்துறை வீதி, **மருமக்கள்,**
கொடிகாமம். **பேரப்பிள்ளைகள்.**
(10479)

### சிந்தனைக்கு..

குரங்கை வைத்து வளர்ப்பவன், அது உடைக்கும் கண்ணாடிக் கோப்பைகளின் செலவை ஏற்றுக்கொள்ளச் சித்தமாய் இருக்க வேண்டும்-

- ஜான் ஸெல்டென்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 25-12-94
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்-05

## தமிழரின் பாதுகாப்பு?

கொழும்பிலிருந்து வவுனியா வரும் புகையிரதத்திலும், வவுனியாவில் இருந்து திரும்பிச் செல்லும் புகையிரதத்திலும் தமிழரின் உடைமைகள் கொள்ளையிடப்படுவது சர்வசாதாரணமான நிகழ்ச்சி. ஒரு வழமையான நடவடிக்கையும் கூட. கடந்த வாரம் அவுஸ்திரேலியாவிலிருந்து திரும்பிய ஒருவர் சுமார் இரண்டரை லட்சம் ருபாவிற்கு மேற்பட்ட தமது உடமையைப் பறி கொடுத்துள்ளார்.

இதேபோன்று மருதானை, கோட்டை புகையிரத நிலையங்களிலும் தமிழரிடம் திருட்டுக்கள், மிரட்டிப் பணம் பறித்தல் என்பன நாளாந்த நடவடிக்கை. இவை பற்றி எவருமே கண்டு கொள்வதாக இல்லை. பொலிசில் முறைப்பாடு செய்தால் அங்கும் மிஞ்சுவது மிரட்டலும் அச்சுறுத்தலுமே. சிலசமயம் பொலிசிற்குச் சென்றால் கையில் எஞ்சியிருப்பதையும் பறிகொடுப்பதாக முடியும் என்ற நிலையில் பொலிசை அணுகாது விடுபவர்களும் அனேகம்.

இவ்வாறான கொள்ளை, திருட்டுக்கள், வழிபறிகள் தொடர்ந்து வரும் செய்திகள் குறித்து அரசாங்கத் தரப்பினரோ, புகையிரதப் பகுதியினரோ எதுவித நடவடிக்கையும் எடுப்பதாக இல்லை. ஆனால் இது சிறிலங்கா பொலிசாரினாலோ அன்றி ஏனைய ஆயுதப் படையினராலோ தடுத்து நிறுத்த முடியாத விடயம் அல்ல.

ஏனெனில் சிறிலங்கா பொலிசார் தென்னிலங்கையில் பல திட்டமிட்டுச் செய்யப்பட்ட பெரும் கொள்ளைகள், கொலைகள் என்பனவற்றை கண்டுபிடித்துள்ளனர். பல கொலை, கொள்ளை முயற்சிகளை முறியடித்ததாக பெருமை பேசியும் கொள்கின்றனர். இந்தவகையில் புகையிரதத்திலும், புகையிரத நிலையத்திலும் நடைபெறும் இக் கொள்ளைகளையும், அச்சுறுத்தல்களையும் தடுத்து நிறுத்த முடியாது எனக் கூறி விட முடியாது அல்லது அவர்கள் முதலில் கூறியவை தப்பானதாகும்.

ஆகையினால் இக்கொள்ளைகள் தொடர்வது என்பது இவை தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்ற அக்கறை அரசிற்கோ அன்றி சிறிலங்கா பொலிசாருக்கோ

# ஒன்றுபட்ட இலங்கை என்றகுரலுடன் இனப்பிரச்சினையை தீர்க்க முடியாது

## கொழும்பு தினசரி ஒன்று கூறுகிறது

(கொழும்பு)
ஒன்று பட்ட இலங்கையை கட்டியெழுப்புவோம் என்ற குரல்களின் மத்தியில், இனப்பிரச்சினைக்கான தீர்வை உருவாக்க முடியாது என்று வீரகேசரி நாளிதழ் தனது ஆசிரிய தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்படுகையில், கடந்த பதினேழு ஆண்டுகளில் ஆட்சி பீடத்தில் இருந்த அரசாங்கம் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான தெளிவான நிலைப்பாட்டை முன்வைக்கவில்லை. இதே நிலைமை இன்றைய சூழ்நிலையிலும் தொடரக் கூடாது.

பேச்சுவார்த்தை என்ற பெயரில் கூடிக் குழப்பும் கசப்பான அனுபவங்களையே கண்டுள்ளோம். நீண்டகாலமாக, மக்கள் சந்தேகங்கள், ஏமாற்றங்களின் மத்தியிலேயே காலத்தை கடத்தியுள்ளனர். தீர்வுக்கும், அமைதிக்கும் கிடைத்த சந்தர்ப்பங்கள் வெறும் சந்தேகங்களினாலேயே குழம்பிப் போயுள்ளன. சமாதானத்தை ஏற்படுத்தும் வாய்ப்புகளை நழுவவிடக் கூடாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கால்நடைகளுக்கு தடுப்பூசி

யாழ் குடாநாட்டில் கால்நடை வளர்ப்பை மேம்படுத்தும் வகையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், பல்வேறு வகையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

அந்த வகையில் கடந்த ஒக்டோபர் மாதம் மாத்திரம் 1463 மாடுகளுக்கு தொண்டையடைப்பான் நோய்க்கு எதிரான தடுப்பூசியும், 5,825 கோழிகளுக்குஅம்மை நோய்த் தடுப்பூசியும் 16918 கோழிகளுக்கு கொள்ளை நோய்க்கு எதிர்ப்பான ரனிக்கட் தடுப்பூசியும் போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# ஜே. வி. பியின் வருடாந்த மாநாடு அடுத்த ஏப்ரலில் நடக்கும்?

(கொழும்பு)
ஜே. வி. பி. எனப் பொதுவாக அழைக்கப்படும் மக்கள் விடுதலை முன்னணியின் வருடாந்த மாநாடு அடுத்த ஏப்ரல் 6-ம் திகதி நடத்தப்படுவதற்கான ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட்டு வருகிறது. இது தொடர்பாக அவ் இயக்கத்தின் பதில் செயலாளர் குணசேன டி சில்வா பஸ்கடுவ பத்திரிகைகளுக்கு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் அவர் மேலும் குறிப்பிடுகையில், மாநாட்டுக்கான பணிகள் ஆரம்பமாகியுள்ளன. தற்காலிக மத்திய குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. இதன் தலைவராக லயனல் போபகேயும், செயலாளராக குணசேன டி. சில்வா பஸ்கடுவவும், பொருளாளராக பியசேன பெரேராவும், தேசிய அமைப்பு சர்வதேச செயலாளராக டாக்டர் சந்திரா பெர்னாண்டோவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

உபதலைவர்களாக சோமரத்ன களுவாராச்சிய, தயாவனித சேகர ஜகத் ஹேமந்த ஆகியோரும், உதவிச் செயலாளர்களாக சிலரன்ஸ் பீரிஸ், கருணாகமநாயக்க, நெல்சன் தயானந்த ஆகியோரும் கடமையாற்றுகின்றனர். 38 பேர் கொண்ட மத்திய செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

எக் காரணத்தை முன்னிட்டும், கொள்ளைகளை நடத்தவோ ஜனநாயகத்திற்கு எதிரான செயல்களில் ஈடுபடவோ மக்கள் விடுதலை முன்னணி எவருக்கும் அனுமதி வழங்கவில்லை எனவும் அவ் அறிக்கையில்குறிப்பிடப்பட்டுள்ளது.

# பேருவளை பொலிசாருக்கு எதிராக ஐ.தே.க. ஆதரவாளர்கள் வழக்கு

(கொழும்பு)
ஆளுங்கட்சி ஆதரவாளர்களின் தூண்டுதலின் பேரில், பேருவளைப் பொலிசார் தாக்கிஉடைமைகளுக்குசேதம் விளைவித்ததுடன், கைது செய்யப்பட்டுசித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டதாகக் கூறி பேருவளைப் பொலிசார் மீது வழக்குதொடரப்பட்டுள்ளது.

ஐ.தே.கவின் பாராளுமன்ற உறுப்பினரான இம்தியாஸ் பாக்கிர் மாக்காரின்நெருங்கிய ஆதரவாளர்களான முகம்மத் மக்கி, முகம்மத் நிஸாமுத்தீன் எம்.எம். முகம்மத் ஆகியோர் சார்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில், அரசியல் அமைப்பின் 11வது 12(1) 12(2) பிரிவுகளை பிரதிவாதிகள் மீறியிருப்பதாக புகார் கூறப்பட்டு உள்ளது.

பேருவளை பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே. ஏ. சந்திரா பெரேரா, பொலிஸ்மா அதிபர் பிராங் டீ சில்வா மற்றும் பொலிஸ் அதிகாரிகள், சட்டமா அதிபர் ஆகியோர் உட்பட 13 பேர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இம் மனுக்களுக்கு அனுசரணையான வாதங்களை சட்டத்தரணிஉபுல் ஜயசூரியவின் அனுசரணையுடன் ஆஜரான முன்னாள் சட்டமா அதிபர் திலக் மாரப்பன முன் வைத்தார்.

மனுக்களை விசாரணைக்கு ஏற்றுக் கொண்ட மேல் நீதிமன்றம் பெப்ரவரி 15-ம்திகதி விசாரணை நடத்தப்படும் எனக் கூறியுள்ளது.

### இங்கிலாந்தால்

முதே அவுஸ்திரேலியா உணர்ந்து கொண்டது.

4-ம் நாள் தொடர்ந்தாடிய அவுஸ்திரேலியா 8 இலக்கு இழப்பிற்கு 248 என்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. மார்க்டெய்லர் 58, சிலேட்டர்45, இயன்ஹிலி 45 என்று ஓட்டங்களைப் பெற்றனர். முதல் இலக்குச் சோடியாக டெய்லரும், சிலேட்டரும் நூறு ஓட்டங்களுக்கு மேல் பெற்றது இது 5-வது முறையாகும். முதல் இனிங்சில் ஒரு ஓட்டத்தால் இதனைத் தவறவிட்டனர். இவ் இனிங்சில் டிபிரெய்டாஸ், கோ இருவரும் தலா 2 இலக்கும் சுழல்பந்து வீச்சாளர் டப்னல் 4 இலக்குகளையும் பெற்றுக்கொண்டனர்.

இங்கிலாந்து சளைக்காததொரு அணி. இதனை தெ. ஆபிரிக்காவுடன் நிரூபித்தவர்கள் இவர்கள் அதேபோன்று 4-ம் நாள் முடியும்போது இங்கிலாந்து2இலக்கு இழப்பிற்கு 211ஓட்டங்கள் பெற்றிருந்தனர். வெற்றிக்கான இலக்கு 608 ஆயினும் ஆட்டத்தை சமன் செய்யும் வாய்ப்பு இங்கிலாந்திற்கு நிறையவே இருந்தது. முதல் இரண்டு இலக்குகளையும் சேன் வோர்ண் வீழ்த்தியதன் மூலம் இங்கிலாந்து ஆபத்தை உணர்ந்தேயிருந்தது. ஆனால் மறுநாள் காலையில் மீண்டும் சேன்வோர்ண் தன் லெக்ஸ்பின் சுழல் பந்துவீச்சுஎப்படிஇருக்கும்என்பதை இங்கிலாந்துக்கு காட்ட எண்ணினார். மளமளவென்று இன்னும் 3 இலக்குகளைச் சரித்தார். இப்பொழுது நிலை 5இலக்கிழப்பிற்கு 250. இதன் பின்னர் மக்டேமட் கட்டிங், றோட்ஸ் இருவரையும் சாய்க்க நிலை 7இலக்கு இழப்பு 309 அதன்பின் மீண்டும் சேன் வோர்ண் தாக்கத் தொடங்கினார். எஞ்சிய மூன்றுஇலக்குகளையும் சரிக்க இங்கிலாந்து ஆட்டத்தை சமனாக்கும் நம்பிக்கை சிதைந்து 323ஓட்டங்களுக்கு முழு இலக்குகளையும் இழந்து நிற்க அவுஸ்திரேலியா 184 ஓட்டங்களால் மகத்தான வெற்றியைப் பெற்றது. சேன் வோர்ண் 50.2 ஓவர்களில் 71 ஓட்டங்களைக் கொடுத்து 8 இலக்குகளைக் கைப்பற்றினார் 22 ஓவர்கள் கன்னிப்பந்துப் பரிமாற்றங்களாக அமைந்தன. யார் இந்த சேன் வோர்ண் என்றால் தன் முதல் டெஸ்ட் ஆட்டத்தில் இந்தியாவில்92ல் 1 இலக்குக்கு 150 ஓட்டங்களைக் கொடுத்தவர் என்பார்கள். இது பழைய கதை. இங்கிலாந்துக்கு எதிராக 87/88 லெக்ஸ்பின் பந்துவீச்சாளர் அப்துல் காதிர் 9/56 என இலக்குகளைச் சரித்தவர். அவரின் சாதனையை விடுத்துப்பார்த்தால் 92/93 இல் மேற்கிந்தியாவிற்கு எதிராக இவர் 7/52 எனவும் 93/ 94 தென்ஆபிரிக்காவிற்குஎதிராக 7/56 எனவும் பெற்றவர். அப்துல்காதிர் மொத்தம் 236 இலக்குகளைச்சரித்தவர். அவுஸ்திரேலிய பெருமைமிக்க வீரர் றிச்சி பெனோ 248 இலக்குகளைச் சரித்தவர். தனது 25வயதிலேயே முப்பதே டெஸ்ட் போட்டிகளில் சேன்வோர்ண் 145 இலக்குகளையும் பெற்று விட்டார். சேன்வோர்ணின் 8/71 எனும் சாதனை அவுஸ்திரேலிய வெற்றியையும் பின் தள்ளி இவர் பற்றிய ஊகங்களையும் உணர்வுகளையும், பிரமிப்பையும் சர்வதேச கிரிக்கெட் உலகில் ஏற்படுத்தி விட்டது.

# மக்கள் செல்வாக்கு பெற்றவர் காங்கிரஸின் தலைவராக வேண்டும்

# சமயாசமய ஊழியருக்கு

பது இவை தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்ற அக்கறை அரசிற்கோ அன்றி சிறிலங்கா பொலிசாருக்கோ அன்றி ஆயுதப் படையினருக்கோ இல்லை என்பதினாலேயே ஆகும். இதனை மறுவளமாகக் கூறின் அவர்கள் விரும்புவதும் அதுவாகவே இருப்பது போன்று தெரிகின்றது.

இவ்வாறாக இவர்கள் நடந்து கொள்வதற்கு அவர்களின் மனங்களில் வேரூன்றி விட்ட இனவெறியே காரணமாகும். இவர்களின் சிந்தனையில் ஊறி விட்ட இனவெறியானது தாங்கள் 'சட்டம் ஒழுங்கின் காவலர்கள்' என்பதைக் கூட அவர்களுக்கு மறந்து போகச் செய்துவிடுகின்றது.

இல்லாது போனால், வடபகுதி புகையிரத சேவையில் மட்டுமே இவ்வாறான தொடர்ச்சியான கொள்ளைகள் நடைபெறுவது ஏன்? கொழும்பிலிருந்து மாத்தறைக்கும், கொழும்பிலிருந்து பதுளைக்கும் நடைபெறும் புகையிரத சேவையில் இவ்வாறு தொடர் கொள்ளைகள் இடம்பெறுகின்றதா? அவ்வாறு இடம்பெற்றால் பொலிசார் பார்த்துக் கொண்டு இருப்பார்களா? அன்றி அரசாங்கம் தான் இது பொலிசின் பொறுப்பு என கை கட்டிக் கொண்டு பார்த்துக் கொண்டு இருக்குமா?

அவ்வாறானால் இதற்கெல்லாம் காரணம் என்ன? ஒன்றே ஒன்று தான். கொள்ளை தமிழர்களிடமே இடம்பெறுகின்றது என்பது மட்டுமே. இந்தவகையில் தமிழரிடம் கொள்ளையிடப் படுவதென்பது தென்னிலங்கை அரசினாலும், சட்டம் ஒழுங்கு பேண வேண்டிய பொலிசாரினாலும் அங்கீகரிக்கப்பட்டதொன்றாகவே கருதவேண்டி உள்ளது.

இவ்வாறானதொரு புறக்கணிப்பு நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதுதான் அரசாங்கம் தமிழ்மக்களின் சமஉரிமைகள் பற்றியும், சம அந்தஸ்துப் பற்றியும் பேசுகின்றது. ஒரு புகையிரதத்தில் பாதுகாப்புடன் சில மணி நேரம் பிரயாணம் செய்யப் பாதுகாப்பு வழங்க முடியாத/விரும்பாத அரசாங்கம், தமிழ் மக்களை வாழ்நாள் பூராவும் பாதுகாப்புடன் வாழ்வதற்கு எவ்வாறு உத்தரவாதம் அளிக்கும்? அதை எவ்வாறு நம்பி ஏற்றுக் கொள்ள முடியும்?

இந்தவகையில் அரசாங்கம் இனப்பிரச்சினை பற்றியோ அதன் தீர்வு பற்றியோ பேசுவதற்கு முன் தீர்க்கப்பட வேண்டிய பல விடயங்கள் உண்டு. தமிழ்மக்களுக்கு பாதுகாப்பான சூழ்நிலை ஒன்று உண்டு என்பதை நிரூபிக்க அரசாங்கம் முனைய வேண்டும். அதனை முதலில் சிறிய விடயங்களிலாவது அரசாங்கம் செய்து காட்ட வேண்டும். இது நம்பிக்கையை வளர்ப்பதற்கு ஒரு சிறந்த வழியாக இருக்கும். இதை விடுத்து சமஅந்தஸ்து பற்றி பேசுவதினால் மட்டும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுவிடமாட்டாது.

# காங்கிரஸின் தலைவராக வேண்டும்

## மத்திய அமைச்சர் அர்ஜுன்சிங்

(டில்லி)

மக்கள் செல்வாக்குப் பெற்றவரும், கவர்ச்சிகரமான ஆளுமை மிக்கவருமான ஒருவர் காங்கிரஸ்கட்சிக்கு தலைமை தாங்க வேண்டும். இவ்வாறு மத்திய அமைச்சரும், காங்கிரஸ் கட்சியில் நரசிம்மராவுக்கு போட்டியாளர் எனக் கருதப்படுபவருமான அர்ஜுன் சிங் கூறியுள்ளார்.

எனினும், பி. வி. நரசிம்மராவின் தலைமையில் காங்கிரஸ் கட்சி ஒற்றுமையோடும், பலத்தோடும் இருப்பதாக கட்சியின் உத்தியோக பூர்வ பேச்சாளரான வி. என். காட்கில் தெரிவித்து இருக்கிறார்.

இதேவேளை நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரஸ் பதவி துறக்கும் வரை ஓயப்போவது இல்லை என்று எதிர்க்கட்சியான பாரதீய ஜனதாக்கட்சி வலியுறுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

அண்மைய சட்டப்பேரவை தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்தும் முக்கியமான ஊழல்கள் சில அம்பலமாகியதை அடுத்தும் காங்கிரஸ் கட்சிக்குள் நரசிம்மராவ் பலத்த நெருக்கடிகளை சந்தித்து வருவது தெரிந்ததே.

# தமிழக ஆளுநர் பதவியிலிருப்பது எனக்கு பலப்பரீட்சைக்களம்

## - ஆளுநர் சென்னாரெட்டி

(சென்னை)

தமிழக ஆளுநராக இருப்பதை நான் விரும்புகிறேன். எனது நம்பிக்கைகளுக்கும், திறமைகளுக்கும் இது ஒரு பலப் பரீட்சைக் களமாக இருப்பதால் தமிழக மாநில ஆளுநராக இருப்பதை மகிழ்ச்சியாக ஏற்றுக் கொண்டுள்ளேன். இவ்வாறு தமிழக ஆளுநர் டாக்டர் எம். சென்னாரெட்டி கூறியுள்ளார்.

புதுடில்லியில் இந்தியப் பெண் பத்திரிகையாளர் சங்கத்தின் மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய அவர் அங்கு கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும்போது இதனைத் தெரிவித்தார்.

மற்றுமொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தமிழ்நாட்டில் நடைபெறவுள்ள உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டாமென்று குடியரசுத் தலைவருக்கும், பிரதமருக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளேன். ஏனெனில் இம்மாநாட்டை நடத்துபவர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் உள்ளது. அவர்கள் நடத்தும் மாநாட்டில் கலந்து கொள்வது அவர்களின் தவறுகளுக்கு அனுமதி கொடுத்தது போலாகி விடும் எனவும் குறிப்பிட்டார்.

# தமிழக ஆளுநரை உடனடியாக மத்திய அரசு திரும்பப் பெறட்டும்

## - முதல்வர் ஜெயலலிதா

(சென்னை)

தமிழக ஆளுநரை உடனடியாக திரும்ப அழைத்து அப்பதவிக்கு வேறு ஒருவரை நியமனம் செய்யும்படி தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழக முதல்வர் இது தொடர்பாக விடுத்திருக்கும் அறிக்கையொன்றில் மேலும் குறிப்பிடுகையில், ஆளுநர் பதவி வகிக்கும் சென்னாரெட்டி திட்டமிட்டு தம் மீது அவதூறு பரப்பி வருவதாகவும், புதுடில்லியில் செய்தியாளர்கள் மத்தியில் அவர் கூறிய கருத்துகள் குறைகூறும் விதமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சமயாசமய ஊழியருக்கு நிரந்தர நியமனம் கிடைக்கும்

(கொழும்பு)

இலங்கை வங்கி நிர்வாகத்தின் கீழ் சமயா சமய சிற்றூழியர்களாக கடந்த பல வருடங்களாக வேலை பார்த்து வந்த ஊழியர்கள் அனைவரும் நிரந்தரமாக்கப்படவுள்ளனர்.

இது தொடர்பாக வி.ஓ.சி. மனேஜ்மென்ட் அன்ட் சப்போர்ட் சேர்விசஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் பணிப்பாளர் சமயா சமய ஊழியர்களுக்கு கடிதமொன்றை எழுதியுள்ளார். அக் கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிடுகையில் கம்பனியின் நிரந்தர ஊழியர்களாக சேர்த்துக் கொள்ளப்பட இருப்பதாகவும் சகல கொடுப்பனவுகளும் உட்பட மாதாந்தம் 2500 ரூபா கொடுப்பனவாக வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

## புல் துண்டுகள் இலவச விநியோகம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் காமதேனு விவசாய கால்நடை பண்ணையில் நெப்பியர் இன புல் துண்டங்களை கால்நடை வளர்ப்பில் ஆர்வம் உள்ளவர்களுக்கு இலவசமாக வழங்கி வருகின்றது.

இப்புல் துண்டங்களைபெற விரும்புவோர் கோண்டாவிலில் அமைந்துள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன யாழ் மாவட்டச் செயலகத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

## ஊடு பயிர் செய்கை

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சூழல் பாதுகாப்பு கொடிவாரத்தை முன்னிட்டு தம்பகாமம் பகுதியில் 10 ஏக்கர் நிலப்பரப்பில் ஆரம்பிக்கப்பட்ட இளவேனில் பண்ணைக் காடு வளர்ப்புத் திட்டத்தின் ஊடு பயிராக சோளம் பயிரிடப்பட்டுள்ளது.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994 12-25**
**ஞாயிறு இரவு**

08.01 - இசையரங்கம் நிகழ்ச்சியில் திரு. இராமப்பிரியன் அவர்களின் வயலின் வாத்தியக் கச்சேரி இடம் பெறும்.
08.30 - செய்திகள்
08.40 - தொடர் நாடகம் பொன். கணேசமூர்த்தி எழுதும் இலங்கை மண் 52-ம் அங்கம்.
09.00 மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

**1994-12-26**
**திங்கள் காலை**

07.02 - மாவீர வணக்கம்
07.15 - நீங்கள்கேட்டவை
07.30 - செய்திகள்
07.35 - பத்திரிகைச் செய்திகள்
07.40 - நீங்கள்கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
08.00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள்யாவும் நிறைவு பெறும்.

இளம் கலைஞர் மன்றம்

## கிறிஸ்மஸ் புத்தாண்டு வாழ்த்துக்கள்

எங்கள் பெருமதிப்புக்குரிய கிறிஸ்தவ உடன் பிறப்புக்களுக்கு இளம் கலைஞர் மன்றத்தின் கிறிஸ்மஸ், புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

குறிப்பு:

மன்றத்தில் அதிமுக்கிய நிர்மாண வேலைகள் நடைபெறுவதனால், வழக்கமாக நாம் நடாத்தும் ஒளி விழாவினை இம்முறை நடாத்த முடியாமல் போயுள்ளது என்பதனை வருத்தத்துடன் தெரிவிக்கிறோம்.

மேற்படி மன்றத்தினர்

சட்டநாதர் வீதி, நல்லூர் (சி-11008)

---

மலரும் நத்தார் புதுவருடத்தில் பெருவாழ்வு பெற்று செழிப்புடனே இனிது வாழ எம் மகிழ்ச்சி பொங்கும் நத்தார் புதுவருட நல் வாழ்த்துக்கள்.

அன்றும் இன்றும் என்றும் உங்கள் சேவையில் சுவையருவி. தரம்! சுவை! சுத்தம் நிறைந்த சிற்றுண்டி வகைகள், மதிய உணவு வகைகள், குளிர்களி, குளிர்பான வகைகள், (சீனவகை உணவு தயாரிப்புகள் உட்பட) யாவற்றையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளவும்... உங்கள் விசேட வைபவங்கள் எதுவானாலும் உங்கள் தேவைகளை நிறைவேற்ற எமது சேவைகளான பரிமாறு சேவை, தகரப் பந்தல், கதிரை யாவற்றையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்

## சுவையருவி

குறிப்பு:- ஓடர்கள் 24 மணிநேர இடைவெளியில் ஏற்றுக்கொள்ளப்படும்

சுவையருவி
5,7, இராசன் தெரு,
யாழ்ப்பாணம்.

சுவையருவி
பேருந்து நிலையம்,
நெல்லியடி.

(சி-11006)

---

## யாழ் வன்னி தொடர்பு சேவை

யாழ்ப்பாணத்திற்கும் வன்னிப்பகுதிக்கும் செய்திகள் (தந்தி) பரிமாற்றம் செய்வதற்கு யாழ். ஆரியகுளம் சந்திக்கு அண்மையிலும், கிளிநொச்சி பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு அருகாமையிலும் உள்ள கருமபீடங்களிலும், ஓமந்தை சோதனை நிலையத்திலுள்ள கருமபீடத்திலும் செய்திகள் ஏற்கப்படுகின்றன.

1. சலுகை செய்திகள் முதல்15சொற்களுக்கும் ரூபா 15/-ம் மேலதிக ஒவ்வொரு சொல்லுக்கும் ரூபா 2/-ம் அறவிடப்படும்

---

# மேலதிக ரஷ்ய துருப்புகள் செச்செனியா நோக்கி விரைவு

(மொஸ்கோ)

ரஷ்ய ஜனாதிபதி பொறிஸ் யெல்ட்சின் மேலதிக துருப்புக்களையும் டாங்கிகளையும் செச்செனியாவிற்கு அனுப்பி வைத்துள்ளார். இரண்டு வாரகாலமாக தலைநகரான குரோஸ்னி மீது ரஷ்ய படையினர் தாக்குதல் நடத்திய போதிலும் அதனை முற்றுகையிட முடியவில்லை என்பதே இதற்கான காரணமாகும்.

இதற்கிடையில்செச்செனிய பிரச்சினை சம்பந்தமாக மொஸ்கோவில் தெரிவிக்கப்படும் எதிர்ப்புக்களையும் யெல்ட்சின் தடை செய்யத் தீர்மானித்துள்ளார்.

பொறிஸ் ஜெல்ட்சின் தாக்குதல்களை நிறுத்தி பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் என்ற வகையில் ரஷ்ய பாராளுமன்றம் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட பின் ரஷ்ய ஜனாதிபதி பகிரங்கமாக எந்த நிகழ்ச்சியிலும் பங்கு பற்றவில்லை. ரஷ்ய மக்களுக்கு அவர் இன்று உரை நிகழ்த்துவார் என அவரின் உதவியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை ஹெலிக்கொப்டர் தாக்குதலைத் தொடர்ந்து ரஷ்ய தரைப்படையினர் முன்னேறிச் செல்வதாக செய்திகள் கூறுகின்றன. அவர்களின் முன்னேற்றத்தைத் தடுக்க செச்செனியர்கள் தயாராகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# காஷ்மீரில் கண்ணிவெடி; 10 அதிகாரிகள் பலி

[டில்லி]

இந்தியாவில் ஜம்மு காஷ்மீரின் பூஞ்ச் மாவட்டத்தில் நேற்றுக் காலை இரண்டு கண்ணிவெடிகள் வெடித்ததில் இந்திய இராணுவத்தைச் சேர்ந்த 10 அதிகாரிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

இரண்டு வாகனங்களும் பலத்த சேதமடைந்துள்ளன. 15 பேர் வரை இச்சம்பவத்தில் காயமடைந்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## பாண் வாங்குவதற்கு காலையில் வரிசை

பாண் பாவனை கூடியுள்ளதால் சில இடங்களில் பாணுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. பொதுமக்கள் பாணை நுகர்வு செய்வதின் அளவு அதிகரித்திருப்பதால் அடிக்கடி தட்டுப்பாடு ஏற்படுகிறது என கூறப்பட்டது.

பாணின் விலை 5 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டதிலிருந்து பொதுமக்களிடையே பாண் பாவனை அதிகரித்துள்ளது. அத்தோடு மாவுக்கு அடிக்கடி தட்டுப்பாடு வெளியில் ஏற்படுவதனால் மக்கள் பாணையே நாடவேண்டியுள்ளது. இதனால் சில இடங்களில் காலை வேளைகளில் மக்கள் வரிசையில் நின்றே பாணை பெறவேண்டியுள்ளது. தற்போது பேக்கறிகளுக்கான மாவின் விநியோகத்தை யாழ். செயலகத்தினர் அதிகரித்துள்ள போதிலும் இந்தப் பாண் தட்டுப்பாட்டு நிலை நிலவுவதை அவதானிக்க முடிந்தது,

(41)

## ஆசிரியர்க்கான மாதிரித்தேர்வு

கோப்பாய், உடுவில், தெல்லிப்பளை, சண்டிலிப்பாய், சங்கானைக் கல்விக் கோட்டத்தில் கடமைபுரிகின்ற கல்வி அபிவிருத்திக்கழக ஆசிரியர்களுச்கும், தொண்டர் ஆசிரியர்களுக்குமானபொதுஅறிவு, பொது உளச்சார்பு எனும் இரு வினாத்தாள் மாதிரித் தேர்வினை நடாத்த கல்விக் கோட்டங்களின் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் தீர்மானித்துள்ளார்கள்,நாளை திங்கட்கிழமை மு.ப. 8.30 மணிக்கு கோப்பாய், உடுவில் கல்விக் கோட்ட ஆசிரியர்கள் இராமநாதன் கல்லூரி மண்டபத்திற்கும், சங்கானை, சண்டிலிப்பாய், தெல்லிப்பளைக் கல்விக் கோட்ட ஆசிரியர்கள் அதேநேரம் மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கும் தவறாது உரிய நேரம் வருவதுடன் தேர்வு முடிய தொடர்ச்சி யாக பொது அறிவு, உளச்

## செஞ்சிலுவை

தொண்டர் குழுத் தலைவர் ஊடாக கீழ்த்தரப்படுத்தலும், கட்டமைப்பு அற்ற தொழில் நிர்வாகமும் பொதுமக்கள் முன்னிலையில் சொல்வதால் தொண்டர்களாகிய நாங்கள் வேலை நிறுத்தம் செய்ய இருப்பதை தங்களுக்கு முன் அறியத் தருகின்றோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி மகஜர் சர்வதேச

## எம்.ஜி.ஆர். நினைவாக

(யாழ்ப்பாணம்)

புரட்சித் தலைவர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களின் 7ஆம் ஆண்டு நினைவு நாள் விழாவின்இரண்டாம்நாளான இன்று காலை 6மணிக்கு மரதன் ஓட்டம், துவிச்சக்கர வண்டிஓட்டம், றிக்சோ சைக்கிள் ஓட்டப் போட்டி என்பன நடைபெறும்.

பிற்பகல் இரண்டு மணிக்கு கயிறிழுத்தல் போட்டி நடைபெறும்.

## விளையாட்டு வினையானது

(யாழ்ப்பாணம்)

விளையாட்டு வினையானது நண்பன் எறிந்த கத்தரிக்கோல் நண்பரின் முதுகில் ஆழமாக பாய்ந்ததில் அவர் படுகாயத்துக்கிலக்கானார்.

மேற்படி சம்பவம் பற்றி தெரியவருகையில், நண்பர்கள் இருவரும் தையல் தொழில் செய்பவர்கள் எனவும் வேலை செய்துகொண்டிருக்கும் போது ஒருவர் மற்றவர் மீது விளையாட்டாக எறிந்த கத்திரிக்கோல் மற்றவரின் முதுகில் ஆழமாக பதிந்ததால் அவர் படுகாயத்துக்குள்ளானார் என தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தின்போது காயமடைந்தவர் ஆறுகால் மடத்தைச் சேர்ந்த செல்லமுத்து குமரகாசன் என்பவ

# வவுனியா - கொழும்பு விமானசேவை

வவுனியாவிலிருந்து கொழும்பிற்கான பயணிகள் விமான சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வாரத்திற்குஒருதடவை இச்சேவை இடம்பெற்று வருகிறது. தனியார்விமானம் இச்சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகத் தெரிய வருகின்றது.

இதேவேளை அடுத்தவாரம் வவுனியாவிலிருந்து கொழும்பிற்கான சரக்குவிமான சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதாக விஷயமறிந்தவட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சரக்கு விமானத்தில் வடக்கின் உற்பத்திப் பொருள்கள் கொண்டு செல்லப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பாக கடலுணவுப் பொருள்களில் இறால், நண்டு ஆகியவை இந்த விமானத்தில் ஏற்றிச் செல்லப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

# மரண அறிவித்தல்கள்

## எட்வேட் செல்வசிங்கம்

(மாதகல்)

மாதகலில் இருந்து இடம் பெயர்ந்து மானிப்பாயில் வசித்து வந்த இளைப்பாறிய பொலிஸ் அலுவலர் மேரிஜோசவ் எட்வேட் செல்வசிங்கம் 24-12-94 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற டோமினிக் மேரி ஜோசவ் (மண்டைதீவு) இனதும், விக்ரோறியாப்பிள்ளை அருளம்மா இனதும் அன்பு மகனும், இளைப்பாறிய ஆசிரியை மில்றெட் மகிழ்மணி (மாதகல்) அவர்களின் அன்புக்கணவரும், திருமதி கிறேஸ்மணி சாமிநாதர் (ஆசிரியை, திருகோணமலை), திருமதி ஜெயமணி லூர் அன்ரனி (இளவாலை), திரு. பிரான்சிஸ் சேவியர் (நகராட்சி மன்றம், திருகோணமலை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 26, கொண்டடி றோட், குருநகர், யாழ்ப்பாணம் இல்லத்திலிருந்து 26-12-94 பி.ப. 3 00 மணிக்கு யாழ். புனித கொஞ்சேஞ்சி மாதா ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கற் திருப்பலியின் பின்னர் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
பிரான்சிஸ் சேவியர் (பாலசிங்கம்)
(சகோதரன்)

(சி-11009)

## கந்தையா சுப்பிரமணியம் (இரத்தினம்)

(போதிடர் வேலணை)

வேலணை கிழக்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் (அஞ்சலகம்,வேலணை) 24-12-94 இல் கோண்டாவிலில் காலமானார். இவர் காலஞ்சென்ற பெருமாள் கந்தையா, சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு மகனும் சிவனேசராசா, புவனேஸ்வரி, நாகம்மா(இரத்த வங்கி, யாழ் போதனா வைத்தியசாலை), யோகராசா [யாழ் போதனா வைத்திய சாலை), தேவராசா, ஆனந்தராசா (இத்தாலி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 25-12-94 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் கிழக்கு மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உறவினரும் நண்பர்களும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. சிவனேசராசா
(சகோதரன்)

'யோகபதி'
329/10 பலாலி வீதி,

கும் ரூபா 2/-ம் அறவிடப்படும்

2. வழமைச் செய்திகள் முதல் 10 சொற்களுக்கு ரூபா 100/-ம் மேலதிக ஒவ்வொரு சொற்களுக்கும் ரூபா 5/-ம் அறவிடப்படும்.

3. வியாபாரச் செய்திகள் முதல் 10 சொற்களுக்கு ரூபா 200/-ம் மேலதிக ஒவ்வொரு சொல்லுக்கும் ரூபா 15/-ம் அறவிடப்படும்.

(மேற் கூறப்பட்ட 1, 2ற்குரிய பதில் பெறுவதற்கு ரூபா100/-ம், 3ற்கு ரூபா 200/-ம் அறவிடப்படும்.)

அவசர கட்டணம் அறவிடப்படும் மேற்குறிப்பிட்ட செய்திகள் உடன் விநியோகிக்கப்படும்.

மேலதிக விபரங்களை அந்த அந்த கருமபீடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

(சி-10872)

# தமிழீழ காவல்துறை

# பதவி வெற்றிடம்

## தட்டெழுத்து, சுருக்கெழுத்து - தமிழ்

தகைமை:- க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்து உட்பட 06 பாடங்களில் சித்தி.

வயது:- 18 தொடக்கம் 30 வரை - ஆண்/பெண் இருபாலாரும்

மேற்படி தகைமையுடைய விண்ணப்பதாரிகள் 28-12-94 காலை 9.00 மணிக்கு பழைய பூங்கா நடுவப் பணியகத்திற்கு சான்றிதழ்களுடன் சமுகம் தரவும்.

பா. நடேசன்
பொறுப்பாளர்,
தமிழீழ காவல்துறை.

(சி-11007)

யாக பொது அறிவு, உளச்சார்பு சம்பந்தமான விரிவுரையும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## பிறப்புசான்றிதழ்

(தொல்புரம்)

1954ஆம் ஆண்டிற்குப்பின் பிறந்தவர்களுக்கான பிறப்புச் சான்றிதழ் பெறுவதற்கான விண்ணப்பப்படிவங்கள் யாழ். பதிவாளர் திணைக்களக் காரியாலயத்தில் ஏற்கப்படுகின்றன.

மேற்படி மகஜர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். தலைமையகம், இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். தலைமையகம் ஆகியவற்றிற்கும் தாங்கள் அனுப்ப உள்ளதாக தொண்டர்கள் தெரிவிக்கின்றனர். (சி)

## பொது நிர்வாக

சுருக்கெழுத்தாளர் ஆகியோருக்கானவிண்ணப்பங்கள் ஜனவரி 23ஆந் திகதிக்குப் பிந்தாமல் அனுப்பப்பட வேண்டும்.


எமது உளங்கனிந்த கிறிஸ்மஸ் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்!

இன்று மட்டும்-கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு

யாழ். ஸ்ரீதர் அகலத்திரையில்

காலை 10.30க்கு மட்டும்

# பிஞ்சு மனம்

(வர்ணப்படம்)

பி. ப. 2. 30க்கு மட்டும்

# எல்லைக் கற்கள்

(வர்ணப்படம்)

அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க
பி. ப. 4.30, 6.30

# இன்னும் ஒரு நாடு

(வர்ணப்படம்)

(சி- 11010)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது


முத்து கமலகாசன் என்பவராவார். [சி[

## மரணம்

(யாழ்ப்பாணம்)

துவிச்சக்கர வண்டியில் இருந்து வீழ்ந்தவர் மூன்று நாட்கள் யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்து நேற்று மரணமானார்.

நவாலி மயூரன் குடியிருப்பில் வசித்துவந்த ஊர்காவற்றுறையைச் சேர்ந்தவரான முத்துக்குமாரு கணபதிப்பிள்ளை (வயது 51) என்பவரே இவ்வாறு மரணமானவராவார். (சி)

## துணைவேந்தராக லக்ஷ்மன்

பேராசிரியர் டபிள்யூ. டீ. லக்ஷ்மன் கொழும்பு பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக பொறுப்பேற்றுள்ளார்.

பொருளியல் பீடத்தின் தலைவராக இவர் முன்னதாக கடமையாற்றினார்.

## திருச்சபையும்

திற்கு வருமாறு அவர்களுக்கு அழைப்பு விடுக்கின்றேன்.

எங்கள் கருத்துக்களை இனவாதம் என்று குறிப்பிடுபவை தமிழ்ப் பத்திரிகைகளும்-ராவய, சந்தேசிய போன்றனவுமே.

அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்ற குழுவுக்கு தலைமை தாங்கிய - மங்கள முனசிங்காவை களுத்துறை மாவட்ட மக்கள் ஏன் நிராகரித்தார்கள்? இந்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியை அகற்றுவதற்காகவே சிங்கள மக்கள் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு வாக்களித்தார்களே தவிர இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்பதற்காகவல்ல என்பதை சகலரும் புரிந்துகொள்ள வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

329/10 பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (10497)

## சின்னத்தம்பி நமசிவாயம்

ஆவரங்காலைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி நமசிவாயம் காலமாகிவிட்டார். அன்னார் ஆச்சிமுத்துவின் அன்புக் கணவரும், பாலசிங்கம் (ஓமான்), வன்னியசிங்கம், இரத்தினசிங்கம் (தொழில்நுட்பவியலாளர், கிளிநொச்சி), இராஜேஸ்வரி (கனடா), பரமேஸ்வரி, இரஞ்சிதமலர், காலஞ்சென்ற குணசிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், தனபாக்கியம், நாகேஸ்வரி, காலஞ்சென்ற பொன்னுத்துரை, இரத்தினசிங்கம், தேவி, தட்சனாமூர்த்தி (ரஞ்சி அழகு சாதன மாளிகை உரிமையாளர், நவீனசந்தை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் ஆவரங்கால் இந்து மயானத்தில் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

தகவல்:
பா. ஜெயக்குமார்
(பேரன்)

10-ம் கட்டையடி,
ஆவரங்கால் (10498)

## திருமதி முத்து அம்மா

மீசாலை மேற்கு, கேணியடி வீதியைச் சேர்ந்த திருமதி முத்து அம்மா 24-12-94 அன்று காலமானார். இவர் முத்துவின் அன்பு மனைவியும், ஜெயகோவிந்தமலர், சாரதபவானி (ஆசிரியை - மீசாலை விக்னேஸ்வரா ம. வி.), சோமகலாவல்லி, சிவசோதி (கடை உரிமையாளர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், தவராசா (கடை உரிமையாளர்), சுந்தரலிங்கம் (ஆசிரியர் - நாவற்குழி ம. வி.), பரம்பொருள் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - கச்சேரி, யாழ்ப்பாணம்), உமாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், சோபியா, சுரேகா, ரோகினி (இந்து மகளிர் கல்லூரி), சுரேந்திரன், நிரோஜன், சுமன், சுஜீதா, சுமிந்தா, ரோஜனாத், பகீர்தரன், டிலக்ஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சின்னத்தங்கம், தவராசா (எழுதுவினைஞர் - கச்சேரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் சகோதரியுமாவார்,

25-12 94 இன்று ஈமக்கிரியைகள் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பி. ப. 2 மணிக்கு வேம்பிராய் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்:
மகள் சாரதபவானி

(10499)